# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 28 ★ 02.06.2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ilakku2009@gmail.com

அனைத்துலக தமிழ் ஊடக மையம்




## விடுதலைப் புலிகளை ஆதரித்தமைக்காக கிடைத்த சிறைவாசம் எனக்கு வாழ்க்கையில் கிடைத்த மிகப்பெரிய வெகுமதியாக நினைக்கின்றேன்.



திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணை பொது செயலாளர் சுப்புலட்சுமி ஜெகதீசன் இலக்கு மின்னிதழுக்கு சிறப்பு பேட்டி

## தமிழர்களுக்கு எதிரான போரை ஐ.நா இன அழிப்பாக ஆராயவில்லை

வணபிதா ஜேவியர் கிரால்டோ குற்றச்சாட்டு



## நள்ளிரவில் 12 மணிக்கு தமிழர் தாயகத்திற்கு கொண்டுவரப்பட்ட பாகிஸ்தானியர்கள்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அரசு மீது தமிழ் மக்கள் கடும் அதிருப்தி?

## வவுனியாவில் குட்டிப் பாகிஸ்தானை உருவாக்க முயற்சியா எனவும் கேள்வி



## காணியை திட்டமிட்டே அபகரிக்கிறார்கள் தடுக்கும் போராட்டத்தை கைவிடமாட்டேன்

திருமலை - திருமதி.க.கோகிலறமணி திட்டவட்டம்

# நள்ளிரவில் 12 மணிக்கு தமிழர் தாயகத்திற்கு கொண்டுவரப்பட்ட பாகிஸ்தானியர்கள்
# தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அரசு மீது தமிழ் மக்கள் கடும் அதிருப்தி?
## வவுனியாவில் குட்டிப் பாகிஸ்தானை உருவாக்க முயற்சியா எனவும் கேள்வி

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளிலிருந்து இலங்கைக்கு வந்துள்ள அகதிகளில் 77 பேர் அடங்கிய மற்றுமொரு தொகுதியினர் நள்ளிரவில் வவுனியாவிற்கு அழைத்து வரப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ளனர் இந்த விடயம் தமிழ் மக்கள் மத்தியில் மிகப்பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

நீர்கொழும்பு காவல் நிலையத்தில் இருந்து ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் ஏற்பாட்டில் அழைத்து வரப்பட்ட இவ் அகதிகள் வவுனியா நோக்கி நகர்த்தப்பட்டுள்ளனர்.

கடந்த 22ஆம் திகதி முதற்கட்டமாக 35 அகதிகள் பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமிற்கு நீர்கொழும்பில் இருந்து நகர்த்தப்பட்ட நிலையிலேயே இரண்டாம் கட்டமாக இந்த நடவடிக்கை நள்ளிரவு 12 மணியளவில் எடுக்கப்பட்டுள்ளமை ஏன் என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.





முன்னதாக இந்த அகதிகளை பூந்தோட்டம் கூட்டுறவு நிலைய கட்டடத்தொகுதியில் தங்கவைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோது சில அரசியல்வாதிகளும், பிரதேச வாசிகளும் கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர். எனினும் அந்த எதிர்ப்புக்களை மீறியே அகதிகள் வவுனியாவுக்கு வருவிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் அரசாங்கம் மற்றும் கூட்டமைப்பின் தலைமை உள்ளிட்ட அனைவரின் மீதும் வவுனியா உட்பட தாயக மற்றும் புலம்பெயர் மக்கள் அனைவரும் கடுமையான அதிருப்தியை வெளியிட்டு வருகின்றனர். தமிழர்களாகிய நாமே சொந்த நிலங்களுக்கு செல்லாது தாயகத்தின் பல்வேறு பகுதிகளிலும், தமிழகத்திலும் முகாம்களில் சொல்லமுடியாத துன்பங்களுக்கு மத்தியில் தங்கியிருக்கின்ற நிலையில் பிற நாட்டு அகதிகளை தாயகத்திற்கு அழைத்து வந்து குடியேற்றுவதன் உள்நோக்கம் என்ன? இது எந்தவகையில் நியாயம் என்றும் பலரும் கேள்வி எழுப்பி வருகின்றார்கள். 2009 யுத்தம் நிறைவுக்கு வந்த பின்னர் தாயகத்திலே இனங்களிற்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் புதிய குடியேற்றங்களை சிங்கள பௌத்த பேரினவாத அரசு முன்னெடுத்துவரும் சூழலில் இப்போது அகதிகளை வடக்கின் முகவாயிலான வவுனியாவிற்கு வரவழைத்து குட்டி பாகிஸ்தான் ஒன்றை உருவாக்க விளைகின்றதா என்றும் தமிழ் மக்கள் தமது ஆதங்கத்தை வெளியிட்டு வருகின்றார்கள் இலங்கை அரசை பாதுகாப்பதை தமது முழுநேர பணியாக செய்துவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அரசு இந்த விடயத்தில் அக்கறையின்றி துணைபோவது மிகவும் வேதனைக்குரிய ஒன்று என்றும் மக்கள் கடும் விசனம் தெரிவித்து வருகின்றனர்.

# நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது தீர்மானம் எடுக்க முடியாதவர்கள் தீர்வை தருவார்களா?
## தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் கேள்வி

உயிர்குடித்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் அமைச்சர் ரிஷாட் பதியூர்தீனுக்கு எதிராக கொண்டவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப்பிரேரணை மீது தீர்மானம் எடுக்க முடியாதிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் எந்தவொரு பிரச்சினைக்குமான உறுதியான தீர்வினை வழங்குவார்களா என்ற கேள்வி எழுந்துள்ளது என தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் குறித்து அம்மையம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இஸ்லாமிய மதத்தின் பெயரால், உயிர்த்த ஞாயிறு தினத்தில் முன்னெடுக்கப்பட்ட தற்கொலை தாக்குதல் சம்பவத்தில் ஏறக்குறைய 90சதவீதத்திற்கும் அதிகமாக உயிரிழந்தவர்கள் தமிழினத்தினைச் சேர்ந்தவர்களே ஆவர்.

அவ்வாறிருக்க, அந்த சம்பவங்களுடன் தொடர்புடையவர்களாக இருக்கும் ஆளுநர்களான ஹிஸ்புல்லா, அசாத்சாலி, அமைச்சர் ரிஷாட் பதியூர்தீன் ஆகியோர் பதவி விலக வேண்டும் என்றும் அவர்கள் மீது உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் ஆளும் எதிர்க்கட்சி என்ற பேதமின்றி வலியுறுத்தப்பட்டுக் கொண்டிருகின்றது.

அப்படியிருக்கையில், அரசியல் புரட்சியின் போது தமிழர்களின் உரிமைகளை புறந்தள்ளி எந்தவொரு முன்நிபந்தனையும் இன்றி ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்ததோடு இன்றுவரை ஆட்சியை பாதுகாப்பதையே தமது முழுநேர பணியாக மேற்கொண்டுவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயத்தில் மௌனிகளாகவே இருந்து வருகின்றார்கள்.

குறிப்பாக அமைச்சர் ரிஷாட் பதியூர்தீனுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து இதுவரையில் கூட்டமைப்பு கூடி ஆராய்ந்து அதுகுறித்து தீர்க்கமான முடிவெடுத்ததாக இல்லை.

மன்னார் மாவட்டத்தின் கிறிஸ்தவ வாக்குவங்கி சரிந்துபோகக்கூடாது மற்றும் வணிக்கப்போட்டியில் பழிதீர்ப்பதற்கு இதுவே சந்தர்ப்பம் என்று எண்ணிய நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் முந்திக்கொண்டு அமைச்சர் ரிஷாட்டை எதிர்த்து பிரேரரணைக்கு ஆதரவளிப்பதாக கூறியுள்ளார்.

இதனையடுத்து தமது வாக்குவங்கியும் கிறிஸ்தவர்களை அதிகமாக மையப்படுத்தியிருப்பதாலும் உறுப்பினர்களும் கிறிஸ்தவர்களாக இருப்பதாலும் வாக்கு வங்கி சரிந்துவிடும் என்ற காரணத்தினால் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளில் ஒன்றான ரெலோவும் பிரேரணைக்கு ஆதரவளிப்பதாக தெரியவருகின்றது. இதேவேளை, புளொட் மதில்மேல் பூனையாக சம்பந்தனின் இறுதி அறிவிப்புக்காக காத்துக்கொண்டிருக்கின்றது. அதேநேரத்தில் கிழக்கு மாகாணத்தில் நிலைமைகள் கூட்டமைப்புக்கு எதிராக இருப்பதன் காரணத்தால் நம்பிக்கை இல்லாப் பிரேரணையை ஆதரிக்க வேண்டும் என்ற நிலைப்பாடு தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்களின் உள் மனதில் இருந்தாலும், கூட்டமைப்பின் தலைமை தீர்க்கமான முடிவெடுக்கும் பட்சத்தில் ஆகக்குறைந்தது நடுநிலைமை வழங்குவதே சிறந்ததாக இருக்கும் என்றும் கருதுகின்றனர்.

இவ்வாறு தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாடுகளை முன்னெடுக்கும், தீவிரவாத தாக்குதல்களுடன் தொடர்புபட்டுள்ளதாக கூறப்படும் ஒரு அமைச்சருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு நம்பிக்கையில்லாப்பிரேரணை வருகின்றபோது போது கூட கூட்டமைப்பு ஒருமித்த தீர்மானம் எடுக்க முடியாதவையாகவே உள்ளன.

இத்தகைய துர்ப்பாக்கிய நிலைமை இருக்கின்ற போது, தமிழ் மக்களின் அன்றாடப்பிரச்சினைகளுக்கு இந்த தலைமைகள் தீர்வினை வழங்கும் என்று எதிர்பார்ப்பதே தவறாகும்.

ஆகவே தான் சுயலாப வாக்குவங்கி அரசியல் செய்யும் தரப்புகளை தவிர்த்து மாற்றுத்தலைமை குறித்து தமிழர்கள் சிந்திக்க வேண்டிய காலம் கனிந்துள்ளது. ஆகவே இச்சந்தர்ப்பத்தினை ஒருபோதும் தவறவிடாது பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றுள்ளது.

# தமிழரசுக் கட்சியின் அலுவலகத்துக்கு முன்பாக போராட்டம்




இலங்கை அரசின் பங்காளியாகியிருக்கும் இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண அலுவலகத்துக்கு முன்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்கள் நேற்று போராட்டமொன்றை நடத்தியுள்ளனர். யாழ்ப்பாணம் மார்ட்டீன் வீதியில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்துக்கு வெளியே இவ்வாறு கவனயீர்ப்பு போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர்.

தமிழரசுக்கட்சியின் முக்கிய மாநாடொன்றிற்காக அனைவரும் வருகை தந்திருந்த நிலையில் இப்போராட்டம் நடந்திருந்தது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் போர் முடிவடைந்து பல ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் இன்றுவரை காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டினர். மேலும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் இந்த விடயத்தில் அக்கறை செலுத்தவில்லை என குற்றம் சாட்டினர். இலங்கை அரசின் சுக போக வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கோடி ரூபாய் பணத்துக்கு விலை போய்விட்டனர். இவர்கள் மக்கள் நலனில் எவ்வித அக்கறையும் காட்டவில்லை. எனவே இவர்கள் பதவிகளை துறக்க வேண்டும் என வலியுறுத்தினர். "காணாமல் போனோர் தொடர்பில் அரசாங்கத்துடன் கதைக்க ஏன் தயக்குகின்றீர்கள்? உங்களால் தீர்வு பெற இயலாது என்றால் புதிய தலைமுறைக்கு வழிவிடுங்கள். ஏன் போர்க்குற்றவாளிகளை பாதுகாத்து கால அவகாசம் கொடுத்தீர்கள்" போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

# அரசியல்வாதிகள் போல் இன்றைய எமது இளைஞர் யுவதிகளும் கிடைத்ததை சுருட்டினால் தமிழர் பிரதேசம் பறிபோய்விடும்

## நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



இன்றைய இளைஞர் யுவதிகளும் எமது வயதில் மூத்த அரசியல்வாதிகள் போல கிடைத்ததை சுருட்ட எத்தனித்தால் எமது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் பறிபோய்விடும் என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். வரணி-சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அறக்கொடை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

மேலும் அவர் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் இன்றைய இளைய சமுதாயம் சிறப்பாகச் சிந்திக்கிறது. காலாதி காலமாக குல வேற்றுமை என்ற கட்டுப்பாட்டுக்குள் வாழ்ந்த முதியவர்கள் இதனை ஏற்றுக்கொள்ள சிரமப்படுகின்ற போதும் இளைஞர் யுவதிகளின் சிந்தனைகள் வளமானதாக அமைந்திருப்பதனை பார்க்கக் கூடியதாக உள்ளது.

இதனால் தான் இளைஞர் யுவதிகளை கூடுதலாக அரசியல் களத்தினுள் உட்புகுத்த வேண்டும் என மீண்டும் மீண்டும் இடித்துரைத்து வருகிறேன். இளைஞர் யுவதிகளும் எம் மூத்த வயது அரசியல்வாதிகளைப் போல் கிடைத்ததை சுருட்ட எத்தனித்தால் எமது வடகிழக்கு மாகாணம் பறிபோய்விடும். தந்து தந்தே எம்முடைய கழுத்தை அறுத்து விடுவார்கள் பெரும்பான்மையினர். நாமும் சிறிய உதவிகளில் மனம் மயங்கி பெரிய உரிமைகளைத் தவற விட்டு விடுவோம்.

எம்மவர்களின் அரசியல் பின்னணிகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாக உள்ளது என்றார்.

# மீண்டும் மோடி!

மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசாங்கம் இரண்டாவது தடவையாக இந்தியாவில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கின்றது. முன்னரைவிடவும் பலமான - ஸ்திரமான அரசாங்கம் ஒன்றை அமைக்கும் வகையிலான மக்கள் ஆணையை மோடி பெற்றிருக்கின்றார். இந்த ஆணையுடன் அரியணை ஏறியுள்ள மோடி இலங்கை விவகாரத்தை எவ்வாறு கையாளப்போகின்றார், என்பதும் ஈழத் தமிழர்கள் இதனை எவ்வாறு பயன்படுத்தப்போகின்றார்கள் என்பதும் இன்றுள்ள முக்கியமான கேள்விகள்.

தமிழகத்தில் மோடி அலை வீசாத போதிலும், தமிழகத்தை சேர்ந்த இருவர் அமைச்சரவையில் இடம் பிடித்திருக்கின்றார்கள். இருவருக்குமே முக்கியமான அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் முக்கியமானவர் வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்ற ஜெய்சங்கர். இந்தியப் படை தமிழர் தாயகப் பகுதிகளில் நிலை கொண்டிருந்த போது, அதன் செயலாளராகவும், அரசியல் ஆலோசகராகவும் செயற்பட்டவர் ஜெய்சங்கர். அப்போது இடம்பெற்ற சம்பவங்களை அவர் அறிந்திருப்பார். அதன் அடிப்படையில், விடுதலைப் புலிகள் குறித்து அவரிடம் சாதகமான ஒரு கருத்து இருக்கும் என எதிர்பார்க்க முடியாது.

அவர் மோடியின் நம்பிக்கைக்குரிய ஒருவர். இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையை வகுப்பதில் முக்கியமான பங்கு அவருக்கு இருக்கப்போகின்றது. சில வருடங்களுக்கு முன்னிருந்த நிலை இப்போது மாற்றமடைந்துவிட்டது. ஐ.எஸ். அமைப்பு நடத்திய தாக்குதல் இலங்கைக்கு மட்டும் அச்சுறுத்தலானதல்ல. இலங்கையில், ஐ.எஸ். ஊடுருவியிருப்பது இந்தியாவுக்கும் அச்சுறுத்தலானது. இந்தியாவின் தவறுகளும் இதற்குக் காரணம். குறிப்பாக, வடக்கு, கிழக்கு தமிழர்களுடைய முழுமையான கட்டுப்பாட்டுக்குள் உள்ள ஒரு பகுதியாக இருந்திருந்தால், இவ்வாறான ஒரு அச்சுறுத்தலோ ஆபத்தோ ஏற்பட்டிருக்காது. இந்தியத் தரப்பு காலங்கடந்த நிலையிலாவது இதனை இப்போது உணர முற்பட்டிருப்பதாகவே தெரிகின்றது.

இந்தியாவில் பலமான ஒரு அரசாங்கம் அமைந்திருப்பது இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரையில் முக்கியமானது. தீர்க்கப்படாதுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கொண்டுவருவதற்கு இந்தப் பலத்தை மோடி அரசு பயன்படுத்தலாம் என்பது அவர்களுடைய எதிர்பார்ப்பு. ஏப்ரல் 21 க்குப் பின்னர் வெளிப்படையாகவே சில இஸ்லாமியத் தீவிரவாதிகளால் உருவாகியுள்ள அச்சுறுத்தல், இலங்கையில் அதிகரித்துள்ள சீனாவின் மேலாதிக்கம் என்பன இந்தியாவுக்குப் பாதகமானது. பலமான ஒரு தமிழர் தரப்பு இந்தியாவுடன் நட்பு சக்தியாக இருந்தால், இவற்றையிட்டு இந்தியா அஞ்சவேண்டியதில்லை.

மோடியின் முதலாவது ஆட்சிக் காலத்தின் ஆரம்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவுடன் நெருக்கமான உறவை வைத்திருந்தது. கூட்டமைப்பின் தலைவர்கள் டில்லிக்கு அழைக்கப்பட்டு பேச்சுக்களும் நடத்தப்பட்டன. ஆனால், பின்னைய காலப்பகுதியில் அந்த நெருக்கமான உறவு காணாமல் போயிருந்தது. கூட்டமைப்பின் இராஜதந்திரத் தவறுகள் அதற்குக் காரணமாக இருக்கலாம். இந்தியாவின் பாதுகாப்புக்கு இலங்கையில் அமைதி நிலவுவது முக்கியமானது என புதுடில்லியிலுள்ள கொள்கை வகுப்பாளர்கள் கருதுகின்றார்கள்.

பலமான தமிழர் தலைமை ஒன்று அவசியம் எனவும் டில்லி கருதுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தப் பாத்திரத்தை வகிப்பதில் தோல்வியடைந்துவிட்டது. இந்தியாவில் உருவாகியுள்ள புதிய அரசு, ஈழப் பிரச்சினையை எவ்வாறு கையாளப்போகின்றது என்பது, தமிழ்ப் பிரதிநிதிகளின் நகர்வுகளில்தான் தங்கியுள்ளது. கூட்டமைப்பு அதற்குரியதாக இல்லை என்பதுடன், மாற்றுத் தலைமை ஒன்றும் தேவையான பலத்துடனும், பற்றுறுதியுடனும் உருவாகவில்லை.

ஈஸ்ட்டர் தாக்குதலின் பின்னரான நிலைமை, குறிப்பாக பாரதிய ஜனதா பலமான அரசாங்கம் ஒன்றை அமைத்திருப்பதை தமிழ்த் தலைமைகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். அதனைக் கையாள்வதற்கு பலமான தமிழர் தலைமை ஒன்று அவசியம். இந்தியா தமது நலன்களுக்காகத்தான் செயற்படும். ஆனால், இலங்கைத் தீவில் காணப்படும் நிலைமைகள் இந்திய நலன்களுக்கு படு பாதகமானது. தமிழர் தலைமை இந்த நிலையை தமது நலன்களுக்காகப் பயன்படுத்தக்கூடிய தரிசனத்துடன் இருக்கின்றார்களா என்பதுதான் இன்றுள்ள முக்கியமான கேள்வி!

# மறக்க முடியுமா?

## 01-06-1981

## இனவாதத் தீயில் எரிந்த எமது இனத்தின் வழிகாட்டி

## யாழ் பொது நூலகம் எரிப்பு நாள்



# தமிழர்களுக்கு எதிரான போரை ஐ.நா இன அழிப்பாக ஆராயவில்லை

## வணபிதா ஜேவியர் கிரால்டோ குற்றச்சாட்டு

ஈழத்தில் தமிழர்களுக்கு எதிரான போரினை, மக்களின் நிரந்தர நீதிமன்றம் இனவழிப்பு என்றே கூறுகின்றது. போலந்து நாட்டினைச் சார்ந்த ரபேயல் லெம்கின் அவர்கள் இனவழிப்பு எனும் வாசகத்தினைப் பற்றி ஆய்வினை மேற்கொண்டுள்ளார். அவரைப் பொறுத்தளவில், ஓர் மக்களின் அடையாளத்தை அழிப்பது இனவழிப்பின் முதலாவது பண்பாகி, அம்மக்கள் மீது அடக்குமுறை செய்பவர்களின் அடையாளத்தினைத் திணிப்பது இரண்டாவது பண்பாகும். இங்கு நிகழ்ந்தவற்றை, மக்களின் நிரந்தர தீர்ப்பாயம் இனஅழிப்பு என்றே முடிவுசெய்துள்ளதென ஜேவியர் கிரால்டோ தெரிவித்துள்ளார்.

கத்தோலிக்க மதகுருவான இவர் மக்களின் நிரந்தர தீர்ப்பாயத்தின் உறுப்பினராக, தமிழ் இனஅழிப்பினை பரிசீலனை செய்வதற்காக யேர்மன் நாட்டின் பிரேமன் பகுதியில் மக்களின் நிரந்தர தீர்ப்பாயத்தில் கலந்துகொண்டிருந்தவராவார்.

இலங்கைக்கான பயணமொன்றை மேற்கொண்டிருந்த அவர் யாழ். ஊடக அமையத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்திருந்தார். அங்கு கருத்து தெரிவித்த அவர் ஐக்கிய நாடுகள் இச்சூழ்நிலையையோ, இவ்வினவழிப்பையோ, இனவழிப்பாக ஆராயவில்லையெனவும் அவர் குற்றஞ்சுமத்தியிருந்தார்.

தமிழர்களுக்கெதிராக நிகழ்த்தப்பட்ட போரைப் பற்றியும், அதனை பரிசீலனை செய்வதற்கும் ஐக்கிய நாடுகள் இனவழிப்பு எனும் சொற்பிரயோகத்தினை பாவிக்கவில்லை என்பதை நாம் அங்கீகரிக்கிறோம். இருப்பினும், இங்கு தமிழர்களுக்கு எதிரான போரினை, மக்களின் நிரந்தர நீதிமன்றம் இனவழிப்பு என்றே கூறுகின்றது. போலந்து நாட்டினைச்



சார்ந்த ரபேயல் லெம்கின் அவர்கள் இனவழிப்பு எனும் வாசகத்தினைப் பற்றி ஆய்வினை மேற்கொண்டுள்ளார். அவரைப் பொறுத்தளவில், ஓர் மக்களின் அடையாளத்தை அழிப்பது இனவழிப்பின் முதலாவது பண்பாகி, அம்மக்கள் மீது அடக்குமுறை செய்பவர்களின் அடையாளத்தினைத் திணிப்பது இரண்டாவது பண்பாகும். இங்கு நிகழ்ந்தவற்றை, மக்களின் நிரந்தர தீர்ப்பாயம் இனஅழிப்பு என்றே முடிவுசெய்துள்ளது. இருப்பினும், ஐக்கிய நாடுகள் இச்சூழ்நிலையையோ, இவ்வினவழிப்பையோ, இனவழிப்பாக ஆராயவில்லை. இதற்கான காரணங்களை நான் விளக்குகிறேன். நான் இதனைப் பின்வருமாறு விளங்கிக்கொண்டுள்ளேன்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைச் சபையில் அங்கத்தவர்களாகிய பல தேசங்கள், இலங்கை அரசாங்கத்தின் அரசியலை ஆதரிப்பவர்கள். இம்மனித உரிமைச் சபையில் இலங்கை அரசிற்கு தங்களது ஆதரவினை வழங்கி வரும் பல லத்தின் அமெரிக்க இடதுசாரி சனநாயக அரசுகளின் இவ்வாறான நடவடிக்கைகளை அவமானத்திற்குரியவையாகவே நான் கருதுகிறேன். இந்நாடுகள், ஐக்கிய நாடுகளில் அங்கம் வகிக்காத மற்றைய நாடுகளுடன் அன்னியப்படுத்தப்பட்டு, அவையும் இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரலுக்குள் முடக்கப்படுகின்றன. இந்நிலைப் பாடுகளால், இனவழிப்புத் தொடர்பான ஓர் சுயாதீன விசாரணைக்கான அவசரத்தினை நிராகரித்தே நிற்கின்றன. ஆகையால், ஐக்கிய நாடுகள் தமிழ் இன அழிப்புத் தொடர்பான ஓர் விசாரணையை ஆரம்பிக்கவில்லை. இருப்பினும், மனித உரிமைச் சபையின் உயர்ச் சபையில் இன வழிப்பினை ஆராய்ந்து, ஓர் விசாரணையை மேற்கொள்வதற்கான பல அடிப்படை கூறுகளைக் காணக்கூடியதாகவுள்ளது. அதுவும், தமிழினஅழிப்பு தொடர்பான சான்றுகளைக் கொண்ட பல ஆதாரங்கள் உள்ளன.

இது ஓர் நீண்ட செயல்முறையாகவிருந்தாலும், இனவழிப்புத் தொடர்பான விசாரணையை நடத்துவதற்கான அடிப்படைகள், ஐக்கிய நாடுகளின் பல சாசனங்களில் எழுதப்பட்டுள்ளன. தமிழர்களுக்கென்று ஓர் தேசமில்லை என்பது நிதர்சனமான ஒரு விடயம். சுதந்திரத்திற்குப் பின் எடுக்கப்பட்ட முடிவுகளிலிருந்து, இவை ஐக்கிய நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட பல சிறுபான்மைகளைப் போல் அல்ல என்பதும் தெளிவாகின்றது. ஆகையால், தமிழர்களின் உரிமைகளுக்கான இப் போராட்டம் மிகவும் கடினமானதொன்றாக இருந்தாலும், இது முறையானது என்பதற்கு ஆதாரமாகப் பல சர்வதேச அமைப்புக்களின் ஆதரவினைப் பெற்றுள்ளது.

2002ல் ஆரம்பிக்கப்பட்டுத் தொடர்ந்த சமாதான காலப் பகுதியில் இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழர்களுக்குமிடையிலான அமைதி பேச்சுவார்த்தைகள், நோர்வே அரசுடன் பல நாடுகளின் ஆதரவுடன் நடந்தேறியது. தமிழர்களின் உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடுவதற்கு, அக்காலப்பகுதியை ஆராய்வதனூடாக பல தீர்வுகளைக் காணலாம் என நான் நினைக்கிறேன். இச்சமாதான காலப்பகுதியில் பல முக்கிய முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன. இதற்கு உதாரணமாக நாம் எடுத்துக்கொள்ளக்கூடியது எதுவாயின், தமிழ் மக்களுக்கான தன்னாட்சி வடிவங்களை ஏற்படுத்துவதாக, இஸ்பானிய தன்னாட்சி வடிவங்களைப் பரிசீலனை செய்வதற்கான வேண்டுகோளாகும்.

இருப்பினும், இக்காலகட்டத்தில் சமூகத்தைப் பிளவுபடுத்தவும், இனக் கலவரங்களை முரண்பாடுகளினூடாக உருவாக்குவதற்கும் இலங்கை அரசாங்கம் பல முயற்சிகளை முன்னெடுத்துவருகிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். குறிப்பாக, சமய நம்பிக்கைகளின் அடிப்படையில் இலங்கை நாட்டவர்களுக்கு மத்தியில் பிளவுகளை ஏற்படுத்துவதே இலங்கை அரசாங்கத்தின் நோக்கமாகவுள்ளது. இது ஈஸ்டர் தாக்குதல்களின் பிற்புலத்தில் மிகவும் தெளிவாகவே அம்பலப் படுத்தப்பட்டுள்ளது. மற்றவர்களைப் போன்று நானும் இத்தாக்குதல்களை இஸ்லாமிய




மதத்தவர்களுக்கும், கிறிஸ்தவ மதத்தவர் களுக்குமிடையில் பாகுபாடுகளை உண்டாக்கி, கிறிஸ்தவர்களை இஸ்லாமிய மக்களுக்கு எதிராக திருப்பும் ஓர் முயற்சியாகவே பார்க்கின்றேன். இத்தாக்குதல்களின் சூத்திரதாரிகளாக இஸ்லாமிய மக்களைச் சித்தரிப்பதனூடாக, இலங்கைத் தீவிற்குள் அனைத்து மதங்களுக்கும் இடையில் பாகுபாட்டினைத் தூண்டுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் நோக்கத்தினைத் தெளிவாக அமுல்ப்படுத்துகிறது.

இத்தாக்குதல்கள் தொடரும் இன்றையக் காலச்சூழலில், இலங்கைத் தீவிலிருக்கக்கூடிய அனைத்து மதங்களையும் சார்ந்த மக்களின் பிரதிநிதிகள் ஓர் சபையில் சந்தித்து, இப்பிளவுகளுக்கான மூல காரணங்களை ஆராயவேண்டிய தேவையுள்ளது. இதனூடாக, அனைத்து சமயத் தலைவர்களும் ஒன்றிணைந்து சமயப் பிளவுகளுக்கு எதிராக ஓர் சமூக உபாயத்தினைக் கட்டியெழுப்புவதனூடாக இவ்வாறான வன்முறைக்கெதிரான ஒரு மாற்று நோக்கினை உருவாக்க முடியுமெனவும் நான் கருதுகிறேன். திரிவுபடுத்தப்பட்ட இப்பிளவுகளை ஆராய்வதற்கான ஓர் சிறந்த வாய்ப்பாகவும் இது அமையும் என நினைக்கிறேன். இவ்வாறான தாக்குதல்களின் மூலகாரணங்களை ஆராய்வதற்கும் இது ஒரு மறு சந்தர்ப்பமாக அமையும். ஏனெனில், இவ்வாறான தாக்குதல்களுக்கான முக்கியக் காரணமாக அமைவது தமிழர் உரிமைகளின் நிராகரிப்பு ஆகும்.

அதாவது, போரினால் பாதிக்கப்பட்ட தமது மக்களுக்கு உரிய மரியாதைகளைச் செய்வதற்குத் தடைவிதிப்பதென்பது தமிழர்களுக்கு உரித்தான அடிப்படை உரிமைகளை மீறும் ஓர் பாரிய செயற்பாடாகும். அவர்களின் உரிமைகளின் நிராகரிப்பு, தமிழ் மக்களின் மீது சிங்களவர்கள் கொண்டுள்ள சக்திகளின் மேலாண்மையினை மிகத் தெளிவாக வெளிக்காட்டுகிறது. அவ்வாறிருக்க, இவ்வாரம் முள்ளிவாய்க்காலில், மே 18, 2009ன் தசாப்தத்தினை நினைவுகூருமுகமாக நடைபெற்ற நிகழ்வினூடாக நாம் ஓர் சிறந்த அனுபவத்தைப் பெற்றுள்ளோம். இருப்பினும் அத்திகதி இனவழிப்பின் முடிவல்ல, அதன் தொடர்ச்சியில் ஓர் முக்கிய புள்ளி என்பதும் குறிப்பிடத்தக்கது. முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வுகள் மிகவும் முக்கியமானவை. ஏனெனில் அவை தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்கு வழங்கும் மதிப்பையும், அதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகின்றன. கடந்த பல ஆண்டுகளாக தமது மக்களை நினைவுகூருவதற்குத் தடைகளைச் சந்தித்த இவர்களுக்கு, இம்முறை இச்சந்தர்ப்பம் அவர்களது முயற்சிகளாலேயே கிடைத்தமை, மக்களின் வெற்றியாகவே அமைகிறதெனவும் வணபிதா ஜேவியர் கிரால்டோ தெரிவித்துள்ளார்.

# தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்தமைக்காக கிடைத்த சிறைவாசம் எனக்கு வாழ்க்கையில் கிடைத்த மிகப்பெரிய வெகுமதியாக நினைக்கின்றேன்.

## விடுதலைப் புலிகளின் தியாக உணர்வும் அவர்களின் தனிமனித ஒழுக்கமுமே அவர்களுடன் நெருங்கிச் சென்றமைக்கு காரணமானது.

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணை பொது செயலாளர். சுப்புலட்சுமி ஜெகதீசன் சிறப்பு பேட்டி**

இந்திய சுதந்திர விடுதலைப் போராட்டத்தில் பங்கு பற்றும் வாய்ப்பு எனக்கு இல்லாது போய் விட்டதே என்ற ஏக்கம் எனக்குள் இருந்தது. எனினும் தமிழீழ விடுதலைப் புலிகளின் சுதந்திரப் விடுதலைப் போராட்டத்தில் ஏதோ ஒரு வடிவில் பங்கெடுத்ததன் மூலம் எனது ஏக்கம் நிறைவுக்கு வந்ததோடு அதற்காக தண்டனையாக கிடைத்த சிறைவாசத்தினை கூட மிகப்பெரும் வெகுமதியாகவே நினைக்கின்றேன். என்று திராவிட முன்னேற்றக்கழகத்தின் துணை பொது செயலாளரும் தீவிர ஈழத் தமிழ் உணர்வாளருமான சுப்புலட்சுமி ஜெகதீசன் தெரிவித்ததோடு தமிழீழ விடுதலைப் புலிகளின் தியாக உணர்வும் அவர்களின் தனிமனித ஒழுக்கமுமே அவர்களுடன் நான் நெருங்கிச் சென்றமைக்கு காரணமானது என்று இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய சிறப்பு பேட்டியில் தெரிவித்துள்ளார், அவருடனான நேர்காணல்.

**கேள்வி:- நீண்டகாலமாக ஈழத் தமிழர்களின் உரிமைக்காக அக்கறையோடு செயலாற்றி வருகின்ற நீங்கள் முள்ளிவாய்க்கால் பேரவலம் நிகழ்ந்து பத்தாண்டுகள் நிறைவடைந்துவிட்ட நிலையில் ஈழத் தமிழர்களின் நிலைமையை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்:- முள்ளிவாய்க்கால் பேரவலம் நிறைவடைந்து பத்தாண்டுகள் நிறைவடைந் தாலும் அந்தக் கோரச்சம்பவங்கள் எமது மனதில் ஆழமாக பதிந்திருக்கின்றன. அது என்றுமே மறக்க கூடிய நிகழ்வாக இருக்க முடியாது. பத்தாண்டுகள் கடந்துள்ள போதும் யுத்தத்தில் இலங்கை அரசால் படுகொலை செய்யப்பட்ட எமது உறவுகளுக்கும் அரசின் யுத்தக் குற்றங்களிற்கும் இன்னமும் நீதி கிடைக்கவில்லை. யுத்தத்தில் தப்பிப்பிழைத்த எமது தமிழ் சொந்தங்களிற்கு சுதந்திரமான வாழ்க்கை அமையவில்லை என்பது என்னைப்போன்று அனைவரின் உள்ளத்திலும் இருக்கக்கூடிய மிகப்பெரும் கவலையாகும்.



ஈரோட்டில் அமைந்துள்ள சுப்புலட்சுமி அவர்களின் வீட்டில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டுவுடன் சுப்புலட்சுமி மற்றும் அவரது கணவர் ஜெகதீசன்.

இன்னமும் எத்தனை ஆண்டுகாலம் எம் மக்கள் கொடுமையான நிலையில் வாழவேண்டியிருக்கும் என்ற வினாவுக்கு விடை தெரியாது தவிக்கின்ற நிலைமையில் தான் நாம் இருந்துகொண்டிருக்கின்றோம்.

**கேள்வி:- தமிழீழ விடுதலையை முன்நிறுத்தி ஆயுதப் போராட்டம் தமிழகத்தில் துளிர்விட்ட போது குறிப்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தலைவர்களுடன் நெருங்கிப் பழகிய வாய்ப்பை பெற்றிருந்த நீங்கள் அக்கால நினைவுகளில் சில முதன்மைப்பதிவுகளை எங்களோடு பகிர்ந்து கொள்ள முடியுமா?**

பதில்:- ஈழத்தில் நமது உறவுகளின் அனைத்து உரிமைகளையும் சிங்கள அரசால் திட்டமிட்டு பறிக்கப்படுவதை அறிந்து நாங்கள் மிகவும் வேதனையடைந்தோம். குறிப்பாக 1983 ஆம் ஆண்டு கலவரத்திலே தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டபோதும் அவர்களின் உடமைகள் சிங்களவர்களால் சூறையாடப்பட்டு விரட்டியடிக்கப்பட்டபோதும் யாழ். நூலகம் தீயிடப்பட்டபோதும் ஈழத்து சொந்தங்களிற்காக தீவிரமாக குரல் கொடுக்க வேண்டும் என்று முடிவெடுத்தோம்.

அன்றைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை சேர்ந்த பல மூத்த போரளிகள் தமிழகத்திற்கு வருகை தந்திருந்தார்கள். அவர்களுக்கு எல்லாம் என்னால் முடிந்த வகையில் நிதி உள்ளிட்ட பல்வேறு உதவிகளை மக்களின் ஊடாக ஒருங்கிணைத்து உதவினோம் அதன் பின்னரான காலத்தில் தம்பி பிரபாகரன் அவர்கள் விடுதலைப்புலிகள் அமைப்பினை முழுமையான போராட்ட இயக்கமாக மாற்றிய காலத்தில் மத்திய அரசின் துணையுடன் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் பயிற்சி முகாம்கள் இடம்பெற்று வந்தது.

இக்காலத்தில் எமது மாவட்டத்திற்கு அருகில் உள்ள கொளத்தூர் பயிற்சி முகாமில் பயிற்சி பெற்ற போராளிகளுக்கு தேவையான உணவு, உடை உள்ளிட்டவற்றை பொதுமக்களிடத்திலிருந்து பெற்று அந்த முகாமிற்கு எடுத்துச் சென்று சேர்க்கின்ற பணியை ஈரோட்டில் இருக்ககூடிய இளைஞர்களை ஒருங்கிணைத்து மேற்கொண்டு வந்திருந்தேன்.

ஈழப்போராளிகளுக்கு ஆதரவாக இருக்கும் கவிஞர் காசி ஆனந்தன் தமிழகத்திற்கு வருகின்றபோதெல்லாம் அவரை இங்கு



அழைத்து வந்து பொதுக்கூட்ட நிகழ்வுகளை ஏற்பாடு செய்து ஈழத்தில் நடைபெறுகின்ற தமிழீழ மீட்பு போராட்டத்தினை தமிழக மக்களிடம் எடுத்துரைக்கும் பரப்புரையினை கிராமங்கள் தோறும் முன்னெடுத்தோம். அந்த நிகழ்வுகளில் சேரும் நிதியினையும் போராளிகளுக்கு வழங்கி வந்தேன். அக்காலத்தில் தமிழீழத்திருந்து மூத்த போராளிகள் ஏராளமானவர்கள் அந்த முகாமினை பார்வையிட வருகை தருவார்கள். அச்சமயத்தில் பலர் என்னுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தார்கள். விடுதலைப் புலிகளின் சார்பில் சரத் என்ற தம்பி மிக முக்கியமானவன். வை.கோ ஈழத்திற்கு சென்ற போது சிறீலங்கா இராணுவம் அவரை சூழ முற்பட்ட தருணத்தில் இராணுவத்தின் கவனத்தினை திசைதிருப்பி அவரை விடுவிப்பதற்காக தன்னுடலில் குண்டுகளை வாங்கி இறந்து போனான்.

பேபி அண்ணா, அரசியல் ரீதியாக பல ஆண்டுகாலமாக தமிழகத்திலே தங்கியிருந்த போது அவருடன் பணியாற்றியிருக்கின்றேன். பொட்டு அம்மான், சாந்தன், வசந்தன் என்று பல போராளிகள் என்னுடன் நெருக்கமாக இருந்தார்கள். அவர்களுடன் பழகிய நாட்கள் என்றும் என் நெஞ்சில் மறக்கமுடியாதவை. காயமடைந்த பெண் போராளிகள் பலரும் என்னுடன் தங்கியிருந்து சிகிச்சைபெற்று மீண்டும் ஈழத்திற்கு சென்று போராட வேண்டும் என்பதில் அவர்கள் காட்டிய அக்கறையை இன்றும் நினைத்து பார்ப்பேன்.

அவர்களிலே கேமா, துளசி,சாரதா, என்னுடன் மிக நெருக்கமாக பழகியவர்கள். அதனைவிடவும், கிட்டு அண்ணாவும் அடிக்கடி தமிழகத்திற்கு வரும்போது என்னுடன் சந்திப்புக்களை நடத்துவார். அக்காலத்தில் 18 போராளிகள் தாயகம் திரும்பியபோது, காட்டிக்கொடுப்பால் சிங்களப்படையினர் சுற்றிவளைக்கவும் அவர்கள் அனைவரும் சயனைட் அருந்தி உயிர்களை துறந்தார்கள். அந்தப் 18 பேரில் அதிகமானவர்களை நான் மிகவும் அறிந்துள்ள ஒருவராக

இருக்கின்றேன்.

**கேள்வி:- தமிழீழ ஆதரவை முன்னிறுத்தி தங்களின் உறுதியான நிலைப்பாட்டால் நீங்களும் உங்கள் கணவரும் சிறை சென்றதாக அறிகின்றோம் இந்த சூழ்நிலை குறித்து ?**

பதில்:- 1991ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தபோது தி.மு.கவை பலவீனப்படுத்துவதற்கான பல கூறுகளை அவர் ஆய்வு செய்திருந்தார். அதன்போது, தி.மு.கவில் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் மற்றும் தீவிரமாக உதவியவர்கள் நெருக்கமான தொடர்புகளை பேணியவர்கள் என அனைவரையும் பட்டியலிட்டு அவர்களை கைது செய்து சிறையில் அடைப்பதன் மூலம் தி.மு.க ஒரு தீவிரவாத இயக்கம் என்று முத்திரை குத்தும் அதேநேரம் ஈழ ஆதரவு நிலைப்பாட்டை பலவீனமுறச் செய்யும் உத்தியினையும் கையாண்டார். அந்த நோக்கத்தின் முதற் பலியாக நானும் எனது கணவரும் தடா சட்டத்தில் கைது செய்யப்பட்டோம். அரசியல் பழிவாங்கலுக்காக தடா சட்டம் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக மத்திய அரசில் தி.மு.க உறுப்பினர்கள் கடுமையாக விவாதித்தார்கள். அதனையடுத்தே அச்சட்டத்தினை பயன்படுத்தி கைதுகளை மேற்கொள்ளும் செயற்பாடுகளை ஜெயலலிதா நிறுத்தி விட்டார். இருந்தாலும் அவரின் பழிவாங்கல் மூலம் அனுபவித்த சிறைவாசத்தினை நான் ஒரு சுமையாக கருதவில்லை. காரணம், சிறுவயது. அத்துடன் இந்திய சுதந்திரத்திற்காக போராடிய குடும்பத் திலிருந்து வந்தவள் என்ற முறையில் நான் பொருட்டாக கருதவில்லை.

மேலும் இந்திய சுதந்திரப்போராட்டத்தில் பங்குபற்றும் வாய்ப்பு எனக்கு இல்லாது போய்விட்டதே என்ற ஏக்கம் எனக்கு இருந்தது. எனினும் தமிழீழ விடுதலைப் புலிகளின் சுதந்திரப்போராட்டத்தில் பங்கெடுத்ததன் மூலம் எனது ஏக்கம் நிறைவுக்கு வந்ததோடு அதற்காக தண்டனையாக கிடைத்த சிறைவாசத்தினை கூட மிகப்பெரும் வெகுமதியாகவே கருதினேன். அதன் மூலம் விடுதலைப்புலிகள் அமைப்பிலும், தமிழக மக்களின் உள்ளத்திலும் ஒரு நல்ல இடத்தினை பெற்றுக் கொண்டேன்.

**கேள்வி:- தாங்கள் அங்கம் வகிக்கும் பழம் பெரும்கட்சியான தி.மு.க நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற இடைத்தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை பெற்றுள்ளமையை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்:- தமிழகத்தில் திராவிட முன்னேற்றக்கழகம், சட்டமன்ற இடைத்தேர்தல் மற்றும், நாடாளுமன்ற இடைத்தேர்தலில் முன்னிலையைப் பெற்றுள்ளமையானது அனைவரினது உள்ளத்திலும் ஒரு நிறைவை ஏற்படுத்தியிருக்கின்றது. பெருந்தலைவர் கலைஞரின் மறைவின் பின்னர் இந்த இயக்கத்தினை வழிநடத்தக் கூடிய ஆற்றல் தளபதி ஸ்டாலினுக்கு உண்டா என்ற பல கோணங்களில் கேள்விகள் எழுந்திருந்தன. அந்தக் கேள்விகளுக்கு இந்த தேர்தல்களின் முடிவுகள் பதிலாக அமைந்திருக்கின்றன. இந்த இயக்கத்தின் வெற்றிக்காவும், வளர்ச்சியாகவும் அரைநூற்றாண்டுகாலமாக பணியாற்றும் எமக்கும் மிகுந்த மனநிறைவைத் தந்திருக்கின்றது. இருப்பினும் நாம் சட்டமன்ற இடைத்தேர்தலில் இன்னும் கொஞ்சம் கூடுதலாக கவனம் செலுத்தி ஆசனங்களை கூடுதலாக பெற்றிருப்போமானால் தமிழகத்தில் ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்தியிருக்க முடியும். அந்த வாய்ப்பினை இழந்து விட்டோம் என்ற குறை எமது உள்ளத்திலே இருக்கின்றது.

**கேள்வி:- தற்போதைய சூழ்நிலையில் தமிழ் நாட்டின் ஆதரவுக்கரம் மிகவும் காத்திரமாக அமையவேண்டுமென ஈழத் தமிழர்கள் நம்பிக்கொண்டிருக்கின்ற நிலையில் எதிர்காலத்தில் தமிழகம் குறிப்பாக தாங்கள் அங்கம் வகிக்கும் தி.மு.க எத்தகைய வகிபாகத்தினைக் கொள்ளப்போகின்றது?**

பதில்:- பாதிக்கப்பட்ட தமிழீழ மக்கள் முழு சுதந்திரத்தினையும், அடிப்படை உரிமைகளையும் சமூக நீதியையும் பெற வேண்டும் என்பதுதான் அனைத்து தமிழர்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. அதனைப் பெறுவதற்கு தமிழ் உணர்வுள்ள அனைத்துக்கட்சிகளும் பாடுபட வேண்டும். ஒருகால கட்டத்தில் அவ்வாறான நிலையொன்றை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. ஜஸ்மின் சூக்கா அவர்கள், பெப்ரவரி 20ஆம் திகதி ஐ.நா மன்றத்தில் அறிக்கையை தாக்கல் செய்திருக்கின்றார். அதில் பாலியல் முகாம்கள் பற்றிய ஆதாரங்களையும் 51 பெண்களின் வாக்குமூலத்துடனும் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. அதில் தமிமீழத்தில் இரகசிய பாலியல் முகாம்களில் தமிழ் பெண்கள் உள்ளிட்டவர்கள் துன்புறுத்தப்படுகின்றார்கள் என்ற செய்தி எம்மை பெரும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது. இதுகுறித்து முன்னாள் அதிபர் சந்திரிகா கூட தனது வருத்தத்தினை தெரிவித்துள்ளார். தமிழீழப் பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற வன்கொடுமைகளிலிருந்து அவர்களை பாதுகாக்க வேண்டும். அவர்களை பாதுகாப்பான சூழ்நிலையில் வாழ வைக்க வேண்டியது தமிழகத்தில் இருக்கக்கூடிய ஒவ்வொரு மனித நேயமிக்கவர்களின் கடமையாகும். இந்த விவகாரம் உலகளாவிய ரீதியிலேயே பேசப்பட வேண்டியதொன்றாகும். அதற்கான பணிகளை திராவிட முன்னேற்றக்கழகத்தினை சார்ந்த நாங்கள் நிச்சயமாக மேற்கொள்ளுவோம்.

**கேள்வி:- பாதிக்கப்பட்ட தாயகத் தமிழர்கள் நீதியைப் பெறுவதற்கு வெளித் தெரியாத இரும்புப் பிடிக்குள் சிக்குண்டுள்ள நிலையில், தமிழ் நாட்டின் தொப்புள் கொடி உறவுகளும் புலம் பெயர் தமிழர்களும் எந்த வகையில் நீதி தேடல் பயணத்தில் பங்காற்ற முடியுமென நீங்கள் கருதுகின்றீர்கள்?**

பதில்:- தமிழீழ மக்களுக்கு நியாயமான, சுதந்திரமான, சுயாட்சி மிக்க தேசம் அமைய வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. அதனை வென்றெடுப்பதற்காகவே ஈழமண்ணிலும், தமிழகத்திலும் பலர் பல்வேறு தியாகங்களைச் செய்துள்ளார்கள். ஈழப்போர் நிறைவடைந்துவிட்டதாக சிறீலங்கா அரசாங்கம் அறிவித்திருந்தாலும் கூட, ஈழத்திற்கான போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை எம்மால் உணரமுடிகிறது.

குறிப்பாக ஈழத்தில் தமிழர் பிரதேசங்களின் உள்ள பல்கலைக்கழக மாணவர்கள், காணாமல்போனவர்களின் உறவினர்கள், முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள தமிழர்கள், நிலங்களை பறிகொடுத்தவர்கள் என அத்தனை பேரும் இன்னமும் போராட்ட உணர்விலேயே இயங்கிக்கொண்டிருக்கின்றார்கள். சிறீலங்கா அரசாங்கம் கூறுவது போன்று போராட்டம் இன்னமும் நிறைவுக்கு வரவில்லை. போராட்டம் இன்னமும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றது. எத்தனை தலைமுறை யானாலும் நாம் அடையவேண்டிய இலக்கினை அடையும் வரையில் இந்தப் போராட்டம் தொடரும்.

ஆரம்பகால கட்டத்தில் தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்கு தமிழக உறவினர்கள் எந்தளவு தூரம் ஆதரவுக்கரம் நீட்டினார்களோ அதனைய தொடர்ந்து தமிழக மக்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. தொப்புள் கொடி உறவு என்றும் அறுந்துபோகாது.

**கேள்வி:- ஈழத் தமிழர் விவகாரத்தில் இந்திய மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் சாதகமான திருப்பம் ஏற்படக்கூடிய வாய்ப்பிருக்கின்றதா?**

பதில்:- மத்திய அரசின் நிலைப்பாடு சந்தேகத்திற்கு உரியதாக இருக்கின்றது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும், இந்த நாடாளுமன்றத்தேர்தலிலும் தமிழக மக்கள் பாரதீய ஜனதாக் கட்சியை அறவே புறக்கணித்துள்ளார்கள். இதனால் மத்திய அரசின் பிரதமர் உள்ளிட்ட அனைவருக்கும் தமிழக மக்கள் மீது மிகுந்த ஆத்திரமும் கோபமும் இருக்கும். தமிழகம் இத்தகைய நிலைப்பாட்டினை ஏன் எடுத்தது? தந்தை பெரியாருடைய கருத்துக்களை ஏற்று சுயமரியாதை, பகுத்தறிவு, சமூக நீதிகளில் நம்பிக்கை உள்ள மக்கள் மதத்தை தூக்கிப் பிடிக்கும் அரசுக்கு ஆதரவளிக்கமாட்டார்கள் என்பதை பல கால கட்டங்களிலே நிரூபித்திருக் கின்றார்கள். அந்த அடிப்படையில் தான் இந்த தேர்லின் முடிவுகளும் அமைந்திரு க்கின்றன.

கடந்த முறை பாரதீய ஜனதா கட்சி ஆட்சி மாற்றத்தின்போது ஈழத் தமிழர்களின் வாழ்வில் மாற்றங்கள் ஏற்படும் என்று பலரும் நம்பினார்கள். நடந்தது என்ன? கடந்த ஐந்து வருடங்களில் இலங்கை அரசிற்கு ஆதரவை வழங்கியதோடு ஈழத் தமிழர்களின் உரிமைகளிற்காக எந்தவொரு அழுத்தத்தையும் மத்திய அரசு வழங்கவில்லை. தற்போது மீண்டும் ஆட்சியில் அமர்ந்துள்ள இந்த அரசு ஈழத்தில் உள்ள தமிழர்களை காப்பதற்கு முன்வருமா என்பது சந்தேகம். இருந்தாலும் இங்குள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒருமித்த குரலில் ஒன்றிணைந்து குரல்கொடுக்கும்போதே அழிவின் விளிம்பில் உள்ள ஈழத் தமிழர்களை காப்பாற்ற முடியும். எனவே இந்த விடயத்தில் எந்தெந்த நேரத்தில் மத்திய அரசுக்கு அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டுமோ, குரல்களை எழுப்ப வேண்டுமோ அப்போதெல்லாம் நாம் தயக்கம் காட்டப்போவதில்லை.

**கேள்வி:- முள்ளிவாய்க்கால் அவலத்துடன் ஈழப்போர் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டதாக சிறீலங்கா அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டதன் பின்னர் இந்தியாவின் தென்மண்டல பாதுகாப்பு கேள்விக்குறியாக மாறியுள்ளதை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்:- இந்தியாவின் தென்மண்டலப்பாதுகாப்பு இன்று கேள்விக்குறியாக மாறியுள்ளது. விடுதலைப்புலிகள் வலுவாக இருந்த காலத்தில் சீனாவோ அமெரிக்காவோ இந்தியாவின் தென்மண்டலப்பகுதிக்கு ஒரு அச்சுறுத்தலாக இருந்திருக்கவில்லை. அத்துடன் அத்தரப்புக்கள்

தொடர்ச்சி 9ஆம் பக்கம் →

# காணியை திட்டமிட்டே அபகரிக்கிறார்கள் போராட்டத்தை கைவிடமாட்டேன்

## திருமலை - திருமதி.க.கோகிலறமணி திட்டவட்டம்

தமிழினத்தின் அடையாளங்களை அழிப்பதே பேரினவாதத்தின் பிரதான திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலாகும். தமிழினம் தாயகத்தின் பாரம்பரியத்தினைக் கொண்ட இனம் என்ற வரலாற்று உண்மைகள், தடையங்களை அழிப்பதோடு பேரினவாத அடையாளமாக முன்னிறுத்துவதும் சிங்கள, பௌத்த மாற்று அடையாளங்களை இலங்கை தீவு எங்கும் நிறுவுதைக் கொண்ட நிகழ்ச்சி நிரலே போர் நிறைவடைந்து தற்போது பத்தாண்டுகளாகின்ற நிலையில் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வரப்படுகின்றது.

பேரினவாதத்தின் நிகழ்ச்சி நிரலில் கடந்த பத்து வருடங்களில் திருமலையில் திரிவுபடுத்தப்பட்ட வரலாற்றின் அடிப்படையில் பல்வேறு விடயங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதில் மிக முக்கியமாக பாழடைந்துவரும் மிக நீண்ட வரலாற்று ஆதாரமான கன்னியா வெந்நீர் ஊற்று பிள்ளையார் கோவில் புனர் நிர்மாணப் பணிகள் தொடர்ந்து தடுக்கப்பட்டே வந்திருந்தன. தற்போது ஒருபடி மேலே சென்று கடந்த 21ஆம் திகதி அப்பிள்ளையார்



ஆலயப்பகுதியை கிண்டிக்கிளறி கிணற்றில் போட்டு மூடுமளவிற்கு நிலைமைகள் சென்றுள்ளன.

முன்னதாக, தற்பேதைய வில்கம் விகாரை காணப்படுகின்ற பிரதேசம் மன்னராட்சிக் காலத்து சிவன் கோவில் என்பதும் தேரர்களின் தந்திரத்தினால் காலப்போக்கில் அது வில்கம் விகாரையாக மாற்றப்பட்டதாகவும் திருக்கோணமலை மூத்த தமிழர்களால் கூறப்படும் வாய்மொழிக்கதையொன்றும் இல்லாமில்லை.

அப்படியிருக்க, வில்கம் விகாரதிபதிகளின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல் பலமாதங்களுக்கு முன்னரே மெதுவாக ஆரம்பித்தாகிவிட்டது. கன்னியா வெந்நீர் ஊற்று பகுதியில் பௌத்த விகாரை ஒன்று அமைப்பதற்காக நிதி சேகரிப்பு நிலையம் ஒன்றை வில்கம் விகாரை பௌத்த பிக்கு ஒருவர் நடாத்த ஆரம்பித்திருந்தார்.

அத்துடன் கன்னியா வெந்நீர் ஊற்றுப்பகுதியின் பின்பக்கத்தில் அமைந்துள்ள மலை அடிவாரத்தில் பௌத்த விகாரை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் ஒன்றிணைத்து பார்க்கின்றபோது கன்னியா பிள்ளையார் கோவிலை அகற்றி அந்த வரலாற்றுப்பகுதியை கையகப்படுத்துவதற்கு வர்த்தமானி அறிவிப்பினையும் விடுத்து சிறீலங்கா அரசாங்கமும் துணைபோயிருக்கின்றது என்பது வெளிப்படையாகின்றது.

இந்நிலையில் கன்னியா மடத்தடி ஸ்ரீமுத்துமாரி ஆலயத்தின் அறங்காவலரும், பிள்ளையார் கோவில் அமைந்திருக்கும் கன்னியா காணி உரிமையாளருமான திருமதி,க.கோகிலறமணி அம்மா அவர்களை நேரடியாக சந்தித்து நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடியிருந்தோம். அப்போது அவர் கூறியதாவது,

**கேள்வி:- பிள்ளையார் கோவில் மற்றும் காணி உரிமம் பற்றி கூறுங்கள்?**

பதில்:- கன்னியா காணியானது எனது பேரனான செல்லையா மணியம் அவர்களுக்கு ஆங்கிலேயர்களால் பரிசாக வழுங்கப்பட்டது. 1833ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தினால் இதற்கான உறுதியும் வழங்கப்பட்டள்ளது. எனது பேரன் 1964ஆம் ஆண்டு உயிரிழந்தார். அதுவரையில் அவரே இதனை பராமரித்து வந்திருந்தார். அதன் பின்னர் எமது குடும்பத்தினரே பரம்பரைபரம்பரையாக பராமரித்து வருகின்றோம். கன்னியா காணியானது 8ஏக்கரும் 22பேர்ச்சஸ் பரப்பினைக் கொண்டதாக அமைந்துள்ளது.

இந்தக்காணியின் பின்பகுதியில் வெந்நீர் ஊற்று உள்ளது. அங்கு உள்ளூர், வெளியூர் சுற்றுலாப்பயணிகள் வந்து செல்வது வழக்கமாகும். பௌத்த தேரர்கள் முதலில் அதனையே ஆக்கிரமித்தனர். பின்னர், எனக்குச் சொந்தமான இந்த பகுதியில் எமது இந்து மக்கள் 31ஆம் நாள் உள்ளிட்ட அந்தியேட்டி கிரியைகளை செய்து வந்தனர்.

இப்படியிருக்க 2002ஆம் ஆண்டு இக்காணியில் இருந்த பிள்ளையார் கோவிலின் ஒருபகுதியை இடித்து பௌத்த விகாரையை அமைப்பதற்கு முனைந்தார்கள். அச்சமயத்தில் நான் போராட்டங்களை நடத்தி அதனை தடுத்திருந்தேன்.

எனினும் அக்காலப்பகுதியில் பாரம்பரிய வரலாற்று இடத்தினை டோசர் மூலம் உடைத்து விட்டதாக பொய்யான குற்றம் சாட்டப்பட்டு உப்புவெளி காவல் நிலையப் பொறுப்பதிகாரியின் ஆதரவுனும், தேரர்களின் பின்னணியுடனும் முறைப்பாடு செய்யப்பட்டது. அதனடிப்படையில் எனது தாயாரை காவல் துறையினர் கைது செய்து



நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினார்கள். அவர் பத்தாயிரம் ரூபா சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டதோடு குறித்த வழக்கு நான்கு வருடங்களாக நடைபெற்றது. எனினும் வில்கம் விகாரதிபதி இந்த வழக்கின் நேரடி சாட்சியமாக இருந்தபோதும் அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததன் காரணமாக பொய்வழக்கு எனக்கூறப்பட்டு ஆலய அறங்காவலராக இருந்த எனது தாயார் விடுவிக்கப்பட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

**கேள்வி:- தொல்பொருள் திணைக்களம் இந்த இடத்தினை எப்படி பொறுப்பேற்றது?**

பதில்:- அவர்கள் பொறுப்பேற்றகவில்லை. வழக்கு தள்ளுபடியாகியவுடன் அடுத்த கட்டமாக இந்தக்காணியை கைப்பற்றுவதற்கு திட்டமொன்று இட்டார்கள். நாங்கள் ஒருநாள் காணியைப் பார்க்க வருகின்றபோது காணியில் தொல்பொருள் பகுதி என்று அறிவித்தல் விடுக்கும் பலகையொன்று நாட்டப்பட்டிருந்தது. தொல்பொருள் திணைக்களம் இதனை கையகப்படுத்தவதாக இருந்தால் எமக்கு அறிவித்திருக்க வேண்டும். உத்தியோக பூர்வமான ஆவணங்களை வழங்கியிருக்க வேண்டும். ஆனால் எதனையும் வழங்காது ஆட்சியாளர்களின் துணையுடன் வர்த்தமானியில் பிரசுரித்துவிட்டு அறிவித்தல் பலகையை மட்டுமே இட்டிருந்தார்கள். இவ்வாறு அவர்களால் பொதுமக்களுக்குச் சொந்தமான காணியை கையகப்படுத்த முடியாது. இருப்பினும் அவர்கள் அவ்வாறு செய்யாது, பிள்ளையார் கோவில் இருந்த வரலாற்று மேடைப்பகுதியை அண்மித்த இடங்களில் எல்லாம் ஆய்வு என்ற பெயரில் தோண்ட ஆரம்பித்தார்கள். அதனை தனியாக எல்லையிடவும் செய்தார்கள். இதற்கு பின்னணியில் வில்கம் விகாரையின் விகாரதிபதியே காரணமாக இருக்கின்றார்.



**கேள்வி:- நீங்கள் விகாரதிபதியுடன் பேச்சுக்களை நடத்தினீர்களா?**

பதில்:- ஆம், அவர் பலதடவைகள் என்னை வந்து சந்தித்துள்ளார். அவருக்கு என்னிடம் உள்ள

தொடர்ச்சி

**தொடர்ச்சி**

ஆதாரங்களை முன்வைத்து விடயங்களை புரிய வைத்துள்ளேன். எனினும், அவர் இந்த பகுதியை தமக்கு விற்பனை செய்யுமாறே வலியுறுத்தினார். அதுமட்டுமன்றி சில அரசியல்வாதிகள் கூட பல கோடிகளை வழங்குகின்றோம். அந்த பகுதியை விட்டுவிடுங்கள் என்று கோரினார்கள். அவர்களின் பெயர்களை நான் பகிரங்கப்படுத்த விரும்பவில்லை. ஆனால் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய அரசியல்வாதிகளே இப்படி இருக்கின்றார்கள் என்று நினைக்கின்றபோது கவலையாக உள்ளது. மேலும் 1985ஆம் ஆண்டு பிள்ளையார் ஆலயம் பதிவு செய்ததற்கான ஆதாரங்களும் உள்ளன.

**கேள்வி:- அடுத்து என்ன செய்வதாக உள்ளீர்கள்?**

பதில்:- நான் ஒரு இந்து சமயத்தினை பின்பற்றும் நபர். எனது ஆகமத்தின் வரலாற்றுத் தொன்மம் வாய்ந்த பகுதியை பணத்திற்காக விற்பனை செய்வதற்கு தயாரில்லை. எத்தனை கோடிகளை வழங்கினாலும் அதனை விற்பனை செய்யப்போவதில்லை. பிள்ளையார் கோவிலை கிளறி பிள்ளையாரை அரசமரத்தின் கீழ் தற்போது வைத்துள்ளார்கள். நான் நீதிமன்றத்தினை நாடுவேன். எனது ஆதாரங்களை மன்றில் சமர்ப்பிப்பேன். விகாரதிபதி முடிந்தால் நீதிமன்றில் முன்னிலையாகி பதிலளிக்கலாம். நீதி கிடைக்கும் வரையில் போராடுவேன். எனக்கு பலம் சேர்த்து என்னுடன் கைகோர்த்திருக்கும் ஏனைய மத, சிவில் அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் மனமார்ந்த நன்றிகள். சத்தியம் ஒருநாள் வெல்லும். பௌத்தத்தினை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் அதனை திணிப்பதையும் அதன் பெயரால் எமது இந்து பாரம்பரியத்தினை கையகப்படுத்த முயற்சிப்பதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டேன். எனது மூச்சு இருக்கும் வரையில் போராடுவேன்.

**கேள்வி:- தமிழ்த்தலைமையும் இந்த மாவட்டத்தினை பிரதிநிதித்துவப்படுத்துவதாக இருக்கின்ற நிலையில் அவருடன் பேச்சுக்களை நடத்தினீர்களா? இந்து கலாசார அமைச்சர் மனோகணேசனின் சந்திப்பு எப்படி இருந்தது?**

பதில்:- இந்த விடயம் சம்பந்தமாக நான் யாரையும் தனிப்பட்ட முறையில் குற்றம் சாட்ட விரும்பவில்லை. ஆரம்பத்திலிருந்தே இந்த விடயத்தினை மக்கள் பிரதிநிதிகளின் கவனத்திற்கு கொண்டுவந்திருக்கின்றேன். ஆனால் அதில் அவர்களின் அக்கறை அதிகமாக இருந்திருக்கவில்லை. தற்போதைய சம்பவத்தின் பின்னர் அமைச்சர் மனோகணேசனை சந்தித்திருந்தேன். அவரிடத்தில் இந்த பகுதியின் பாரம்பரியத்தினை கூறி மீண்டும் பிள்ளையார் ஆலயத்தினை அமைப்பதற்கு உதவியளிக்குமாறும், பௌத்த ஆக்கிரமிப்பையும், தொல்பொருள் திணைக்களத்தின் ஆக்கிரமிப்பையும் உடன் நிறுத்துமாறும் கோரியுள்ளேன்.

7 ஆம் பக்க தொடர்ச்சி ➔

## தமிழீழ விடுதலைப்புலிகளை ஆதரித்தமைக்காக

இந்தியாவின் தென்மண்டலம் குறித்து கவனம் செலுத்தியிருக்கவுமில்லை. விடுதலைப்புலிகளின் போராட்டம் முடிவுக்கு வந்ததன் பின்னர் இத்தகைய அச்சுறுத்தலான நிலைமைகள் எழுந்துள்ளன. சீனா சிறீலங்காவை தொடர்ந்து தற்போது ஈழ மண்ணிலும் தனது ஆதிக்கத்தினை நிலைநிறுவத் தொடங்கியுள்ளது. அமெரிக்கா தனது ஆதிக்கத்தினை நிலைநிறுத்த முயன்று கொண்டிருக்கின்றது. இரண்டு வல்லரசுகளும் ஈழமண்ணில் காலூன்றி விட்டால் இந்தியாவின் தென்மண்டலத்தின் பாதுகாப்புக்கு மிகப்பெரும் அச்சுறுத்தல் ஏற்படும் என்பதில் எவ்விதமான சந்தேகமுமில்லை.

தென் மண்டலப்பாதுகாப்பு என்பதற்கு அப்பால் ஈழத்திலே தேவாலயங்களில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இத்தகைய தீவிரவாத செயல்கள் விடுதலைப்புலிகள் அந்த மண்ணில் வலுவாக இருந்த காலத்திலே நடைபெற்றிருக்கவில்லை.

விடுதலைப்புலிகள் வலுவாக இருந்த தருணத்தில் இந்தியாவின் தென் மண்டலத்திற்கு எவ்விதமான பாதிப்புக்களும் இருந்திருக்கவில்லை. அதேபோன்று ஈழத்திற்கும் எவ்விதமான அச்சுறுத்தலுமிருந்திருக்க வில்லை. அந்த அமைப்பு பலவீனமாக்கப்பட்டதன் பின்னர் தற்போது நடைபெற்ற தற்கொலை தாக்குதல்கள் அதன் பின்னர் இஸ்லாமிய மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்கள் உள்ளிட்ட அனைத்துமே ஈழமக்களுக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கின்றது.

இத்தகைய தீவிரவாத தாக்குதல்கள் இலங்கையில் நடைபெற்ற பின்னர்தான், சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், முன்னாள் சனாதிபதியும், எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்சவும் விடுதலைப்புலிகளின் போர் அறம் குறித்து புகழ்ந்து பேசியிருக்கின்றார்கள் என்ற செய்திகளை ஊடகங்களில் காணக்கிடைத்தது. ஒரு தலைவன் தன்னுடைய நாட்டில் இனத்தினை அழித்தொழிக்கும் சக்திகளிலிருந்து பாதுகாப்பினை வழங்குவதிலும், அண்டை நாட்டின் பாதுகாப்பிலும் எவ்வளவு தூரம் அக்கறையாக செயற்பட்டார் என்பது தற்போதைய நிகழ்வுகளிலிருந்து எமக்கு உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. இத்தகைய பேராபத்துக்களிலிருந்து இந்தியாவின் தென் மண்டலத்தினையும், ஈழ மண்ணையும், தமிழீழ மண்ணையும் பாதுகாப்பதற்காக ஐ.நா மன்றம் நடைபெற்ற குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை முன்னெடுத்து நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பது தான் தமிழகத்தில் இருக்கும் எமது மிகப்பெரும் ஆவலாக உள்ளது.

## பதவி விலகமாட்டோம் - வேண்டுமானால் நீங்கள் நீக்குங்கள்



"எமது பதவிகளிலிருந்து நாம் ஒருபோதும் விலகவே மாட்டோம். நாம் பதவிகளிலிருந்து விலகுவதை எமது ஆதரவாளர்கள் துளியளவும் விரும்பவில்லை. எனவே வேண்டுமானால் சனாதிபதி தனக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்தி எம்மைப் பதவிகளிலிருந்து விலக்கட்டும்."

இவ்வாறு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மேல் மாகாண ஆளுநர் அஸாத் ஸாலி மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா ஆகியோர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

மூவரையும் பதவி விலகக் கோரி நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரர் ஆரம்பித்துள்ள உண்ணாவிரதப் போராட்டம் சிங்கள முஸ்லிம் இனக் கலவரமாக மாறும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாலும் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் கோரியமையாலும் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, மேல் மாகாண ஆளுநர் அஸாத் ஸாலி ஆகிய மூவரும் தமது பதவிகளிலிருந்து விலகவுள்ளனர் என அவர்களுக்கு நெருக்கமான வட்டாரங்கள் முதலில் தெரிவித்திருந்தன. எனினும் தத்தமது ஆதரவாளர்களை அவர்கள் சந்தித்த பின்னர் முடிவை மாற்றியுள்ளனர். இது தொடர்பில் வினவியபோதே அவர்கள் மூவரும் மேற்கண்டவாறு கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் எமக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை. தாக்குதல்தாரிகளுடன் எமக்கு எந்தத் தொடர்பும் இல்லை. இந்தநிலையில் எந்தக் குற்றங்களும் செய்யாத எம்மைப் பதவி விலகுமாறு கூறுவதை ஏற்க நாம் தயாரில்லை. இனவாதிகளின் கூக்குரல்களுக்கு அஞ்சி நாம் எமது பதவிகளைத் துறக்கவேமாட்டோம். அவ்வாறு பதவி விலகினால் நாம் குற்றங்களை ஒப்புக்கொண்டமைக்குச் சமனாகும். நாம் பதவிகளிலிருந்து விலகுவதை எமது ஆதரவாளர்கள் துளியளவும் விரும்பவில்லை. எமக்குப் பதவிகளை சனாதிபதி வழங்கினார். வேண்டுமானால் சனாதிபதி தனக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்தி எம்மைப் பதவிகளிலிருந்து விலக்கட்டும். எமது பதவிகளிலிருந்து நாம் ஒருபோதும் விலகவே மாட்டோம்" என்றனர்.

## தர்மசங்கடத்தில் பிரதமர் ரணில்

சிறீலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வலது கரமாக இருப்பவர் அமைச்சர் சாகல ரட்நாயக்க. அதேபோன்றே நீண்டகால நெருக்கத்தினை கொண்டிருப்பவர் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம.

இப்படியிருக்க திருகோணமலையில் துறைமுகத்திற்குச் சொந்தமான 600ஏக்கர் காணியை இரும்புத்தொழிற்சாலை அமைப்பதற்கு வழங்குவதற்கான முதலீட்டுச் சபை ஒப்புதல் அளித்துள்ளது. எனினும் குறித்த காணியை வழங்க முடியாது என்பதில் அமைச்சர் சாகல ரட்நாயக்க தொடர்ச்சியாக கூறிவருகின்றார்.

அதேநேரத்தில் அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவும், அக்காணியை பெறுவதில் குறியாக இருந்து வருவதோடு பிரதமர் ரணிலுக்கும் நேரடியாகவே அழுத்தங்களை பிரயோகிக்க ஆரம்பித்துள்ளார்.

இவ்வாறு தனக்கு நெருங்கிய இருவரும் மோதிக்கொள்ள ஆரம்பித்துள்ளமையால் பிரதமர் ரணில் யாருடைய பக்கம் தீர்மானம் எடுப்பது என்று தெரியாது நெருக்கடியில் உள்ளதாக உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# யாழ் நூலக எரிப்பு

## ஈழத் தமிழினத்தின் மீதான அறிவழிப்பு

**தீபச்செல்வன்**

ஈழத் தமிழ் இனம், அறிவாலும் ஆற்றலாலும் உலகறியப்பட்ட இனம். இதுவே ஈழத் தமிழ் மக்களின் உரிமை பறிப்புக்கும், அவர்களை இரண்டாம் தரப் பிரசைகளாக அடிமை கொள்ள வேண்டும் என்ற பேரினவாத ஆதிக்கத்திற்கும் காரணமாகும். இலங்கை இன ஒடுக்குமுறை வரலாற்றில், 1983 யூலைப் படுகொலை மிகப் பெரும் முன் ஈழ இன அழிப்பாக கருதப்படுகின்றது. அதைப்போலவே, 1981 ஆம் ஆண்டு யாழ் நூலக அழிப்பும் ஈழத் தமிழ் இனத்தின் அறிவு மீதான மாபெரும் இன அழிப்பு.

யாழ் நூலகம் ஆசியாவிலேயே புகழ்பெற்ற நூலகம். அங்கு உலகின் அரிய புத்தகங்கள், ஓலைச்சுவடிகள், சாஸ்திரங்கள் என பலவகைப்பட்ட பொக்கிசங்கள் இருந்தன. ஈழத்தின் பழம்பெரும் நூல்கள், தமிழின் கிடைத்தற்கரிய நூல்களை எல்லாம் கொண்டிருந்தது யாழ் நூலகம். சிறையில் சிக்கிய சிங்கள தலைவர்களை மீட்பற்கு பிரித்தானியா சென்ற ஈழத் தமிழ் தலைவர்கள், அறிவினால்தான் பிரித்தானிய அரசின் செல்வாக்குரியவர்களாக இருந்தனர்.

பிரித்தானிய இலங்கையில் அதிகம் அரச தொழிலில் இருந்தவர்களும் ஈழத் தமிழ் மக்களே. முதல் கட்டமாக தனிச்சிங்கள சட்டம் கொண்டுவரப்பட்டு, அவர்களின் வேலைகள் பறிக்கப்பட்டன. அத்துடன் இன மேலாதிக்க வெறி முடிந்துவிடவில்லை. அதன் பிறகு கல்வி தரப்படுத்தல் சட்டம். எல்லாவற்றையும் விஞ்சும் கொடூரமாக யாழ் நூலகம் எரியூட்டப்பட்டது. உலகில் பள்ளிக்கூடங்களையும் நூலகங்களையும் அழிக்கக்கூடியவர்கள் மிகவும் கொடூரமானவர்களாயிருப்பர். அவர்களிடம் சனநாயகம் இருப்பதில்லை. அவர்கள் மனித இனத்திற்கு எதிரான விலங்குகள்.

அத்தகைய கொடூரச் செயல்தான் யாழ் நூலக எரிப்பு. 1981ஆம் ஆண்டு யூன் 1ஆம் நாள். அதாவது மே 31 அன்று நள்ளிரவு யாழ் நூலகம்மீது தீயிடப்பட்டது. மே 1ஆம் திகதி வரையில் யாழ் நூலகம் எரிந்து சாம்பலாகிக் கொண்டிருந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் அன்றைய தலைவர், ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் அரசே இந்த பயங்கரவாதத்தை நிகழ்த்தியது. அன்று ஆட்சியில் இருந்த அமைச்சர்கள் நேரடியாக இவ் இன அறிவழிப்பில் களமிறங்கினர் என்பதற்கும் சிங்கள தலைவர்களே சாட்சி.

பிரித்தானியருடன் இத் தீவின் சுதந்திரத்திற்காக போராடிய இனத்தின் உரிமைகளை மறுத்து, அவர்களை ஒடுக்கியபோது, அவர்கள் தமது உரிமைகளை கோரி சனநாயகப் போராட்டங்களில் ஈடுபட்டனர். அதற்கு பதிலாக சிங்கள அரசு, ஈழத் தமிழ் மக்களை இனப்படுகொலை செய்தது. அவர்களின் சொத்துக்களை அழித்தது. இங்கே மாபெரும் அறிவுச் சொத்து 97 ஆயிரம் புத்தகங்களை அழித்தது. ஈழத் தமிழ் மனிதர்களுடன் மாத்திரம் இன வன்முறை செய்யப்படவில்லை. ஈழ நூலகங்களில் உள்ள புத்தகங்களுடனும் இன வன்முறைகள் புரியப்பட்டன.



யாழ் நூலக எரிப்பு ஈழத் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் ஆறாத வடுவாக பதிந்தது. மனிதர்கள் வெட்கி தலைகுனிகின்ற செயல் இதுவாகும். இன்றளவிலும் இலங்கை அரசு நிகழ்த்திய மாபெரும் குற்றமாக இது காணப்படுகின்றது. ஈழத் தமிழ் மக்களை மாத்திரமின்றி, உலக மக்களையே இது பாதித்த நிகழ்வு. புத்தகங்களுடன் இன வன்முறை செய்பவர்கள், மனிதர்களை என்ன செய்வார்கள் என்ற புரிதலை ஏற்படுத்தியது. சிங்களப் பேரினவாதிகள், தமிழர் நிலத்தில் உள்ள மரங்கள் முதல் பறவைகள் வரை அழிப்பதில் குறியாய் இருப்பவர்கள்.

யாழ் நூலக எரிப்பு என்பது, ஈழத் தமிழ் அறிவுச் சொத்தழிப்பாகவும், பண்பாட்டு அழிப்பாகவும் நிகழ்த்தப்பட்டது. ஈழத் தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு செயற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டதுடன் இவ் விரண்டு அழிப்பிலும் சிங்கள அரசு திட்டமிட்டு கவனம் செலுத்தியது. பிற்காலத்தில், தமிழீழ மண்மீது திட்டமிட்ட அழிப்புப் போரை தொடங்கியபோது, கிராமம் கிராமமாக நூலகங்களும் புத்தகங்களும் அழிக்கப்பட்டன. ஈழத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து அம்பாறை வரை எத்தனையோ நூலகங்களில் அரிய அறிவுப் பொக்கிசங்கள் இருந்தன.



அவை எல்லாம் அழிக்கப்பட்டிருக்கின்றன. போர் நடவடிக்கைகளின் போது, வீடுகளில் இருந்த புத்தகங்கள் சிங்கள இராணுவத்தால் தீயிடப்பட்டுள்ளன. 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் வரையில் முன்னெடுக்கப்பட்ட இன அழிப்புப் போரில் நாம் எத்தனையோ அரிய புத்தகங்களை இழந்துவிட்டோம். அவ்வளவும் இன அழிப்பு செய்யப்பட்டன. போராட்ட காலத்தில் வன்னியில் எழுதப்பட்ட அத்தனை படைப்புக்களும் உருவாக்கப்பட்ட ஆவணங்களும் அழிக்கப்பட்டன. எத்தனையோ அரிய பத்திரிகைகளும், வெளியீடுகளும் வன்னியில் சேகரிக்கப்பட்டன. அவை யாவற்றின்மீதும் தீயை வைத்தது சிங்களம்.

யாழ் நூலகத்தின் சுவர்கள் மாத்திரம் சிங்களப் படைகளால் எறியூட்டப்படவில்லை. எத்தனையோ நூலகச் சுவர்கள் எரியூட்டப்பட்டன. எத்தனையோ கலாசார மரபுரிமை கட்டடங்கள் அழிக்கப்பட்டுள்ளன. ஒரு இனத்தின் அடையாளத்தை அழிப்பதால், ஒரு இனத்தின் கல்வியை அழிப்பதால், ஒரு இனத்தின் பண்பாட்டு மரபுரிமையை அழிப்பதால், அவர்களை அழித்து விடலாம் என்பது ஆக்கிரமிப்பாளர்களின் இன அழிப்பாளர்களின் கணிப்பு. அதையே சிங்களமும் செய்தது.

2009 போர் முடிவுக்கு வந்த பின்னர், யாழ் நூலகத்திற்கு சுற்றுலா வந்த சிங்களப் பிரயாணிகள் நூலகத்தின் அலமாரிகளில் அடுக்கியிருந்த புத்தகங்களை இழுத்தெறிந்து வீசி தமது வெறுப்பை வெளிப்படுத்திய நிகழ்வு, ஊடகங்களில் வெளிவந்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. கிட்டத்தட்ட 28 வருடங்களின் முன்னர் எமது நூலகத்தில் தீயை வைத்ததைப்போலவே இன்றும் தீயை வைக்கும் மனநிலையில் இன்னமும் வரும் பேரினவாதிகளை என்னவென்பது? இப்படியான மனநிலை இன்னமும் இருக்கிறது என்பது நமக்கு பல புரிதலை தர வேண்டும்.

அண்மையில், நான் எழுதிய நடுகல் நாவலை, எடுத்துச் சென்ற சகோதரி ஒருவர், இராணுவத்தின் ஒவ்வொரு சோதனைச் சாவடியிலும், அதற்கு பெரும் விளக்கம் கொடுக்க நேரிட்டதாக சொன்னார். இப்போதும், எமது புத்தகங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. இப்போதும் எமது புத்தகங்கள் கண்காணிக்கப்படுகின்றன. இந்தியாவிலிருந்து ஈழம் வரும் புத்தகங்கள் எல்லாம் விசாரணைகளின் பின்னரே கையளிக்கப்படுகின்றன. தமிழர் பூமி புத்தகம் இலங்கை வந்தபோது, அதன் அட்டைப்படம் குறித்த விசாரணைக்குச் சென்றிருந்தேன்.

எமது மண்ணின் தலைமுறைகள், எமது மண்ணின் மனிதர்கள் எமது புத்தகங்களையும் எமக்கு தேவையான புத்தகங்களையும் படிக்க கூடாது என்பதில் இராணுவமும் அரசும் தெளிவாக இருக்கிறது. இலங்கை அரசும், சிங்களப் பேரினவாதிகளும் சொல்லித் தரும் கதைகளையும் வரலாற்றையும் படிக்க வேண்டும் என்பதே அவர்களின் விருப்பம். அல்லது அவர்களின் ஞானஸ்தானம் பெற்ற தமிழ் புலி எதிர்ப்பு படைப்பாளிகளின் நூல்களை படிக்கலாம். அன்று யாழ் நூலக எரிப்பு எமது போராட்டத்தை வலுப்படுத்தியது. புத்தகங்களைப் பெருக்கியது. நாம் சாம்பலாகிவிடாமல், புதிய பக்கங்கள் எழுதப்படுகின்றன. புதிய புத்தகங்கள் எழுதப்படுகின்றன. புதிய நூலகங்கள் உருவாக்கப்படுகின்றன. ஏனெனில், அறிவாலும் போராடி இவ் உலகை வெல்ல வேண்டும் என்ற தலைவர் பிரபாகரனின் சிந்தனை விதைக்கப்பட்ட மண் இது.

# பனை நிதியமும் - ரிஷாத்தும்

பூமிகன்

பட்ஜட்டுக்கு கூட்டமைப்பின் ஆதரவைப் பெறுவதற்காக கம்பரலிய திட்டத்தை அரசாங்கம் கொடுத்தது. இப்போது ரிஷாத்தைப் பாதுகாப்பதற்காகவா 'பனை நிதியம்' அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளதா என்ற கேள்வி தமிழ் அரசியல் வட்டாரங்களில் எழுப்பப்பட்டிருக்கின்றது. 'பனை நிதியம்' என்ற திட்டத்தை வைத்து கூட்டமைப்பு எம்.பி.க்களைப் பணிய வைப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் வியூகம் வகுத்திருக்கின்றார். கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் இதற்கு உடந்தையாக இருக்கின்றார் என்றும் தெரிகின்றது.

வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்காக 'பனை நிதியம்' என்ற பெயரிலான திட்டம் ஒன்று கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. இந்தத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது. போரால்



அதிகம் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்வாதாரம், மீள்குடியமர்வு, விவசாயம், உட்கட்டுமாணம் ஆகியவற்றின் மேம்பாட்டைக் கருத்தில்கொண்டு இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டது. இதற்காக 500 கோடி ரூபா ஒதுக்கப்பட்டு திட்டங்களை இரு ஆண்டுகள் முன்னெடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதற்கமைய 2019ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் 250 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

இது குறித்த நிகழ்வில் நிதி அமைச்சர் மங்கள சமரவீர, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், பொருளாதார மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் ஹர்ஷ டி சில்வா, கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், யோகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். அதாவது, ஐ.தே.க.வினரும் கூட்டமைப்பினரும்தான் இதில் கலந்துகொண்டிருந்தனர். இதன் மூலமான நிதியும் அவர்கள் மூலமாகத்தான் ஒதுக்கப்படப்போகின்றது. இந்த நிதியம் வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில்



தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும், எதிர்காலத்தில் புலம்பெயர்ந்தோர் நிதியை நேரடியாக இந்த நிதியத்துக்குக் கொடுக்கும் வகையிலான ஏற்பாடுகளும் உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. அதாவது, வடமாகாண முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் புலம்பெயர்ந்த மக்களின் நிதி உதவியுடன் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்காக "முதலமைச்சர் நிதியம்" ஒன்றை ஆரம்பிக்க முயன்றார். அதனை அரசு அங்கீகரிக்கவில்லை. கூட்டமைப்பும் அதற்கான அழுத்தத்தைக் கொடுக்கவில்லை. இப்போது, கூட்டமைப்பின் ஆதரவுடன் பனை நிதியம் ஆரம்பிக்கப்படுகின்றது. அப்போது விக்கி முன்வைத்த திட்டத்தின் அடிப்படையில் இது திட்டமிடப்பட்டுள்ளதா என்ற கேள்வியை இது எழுப்புகின்றது.

வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்புக்கு வந்தபோது, 'கம்பரலிய' திட்டத்தை அறிவித்து கூட்டமைப்பின் ஆதரவை அரசு பெற்றது. எம்.பி.கள் ஒவ்வொருவருக்கும் 40 கோடி ரூபா ஒதுக்கீடும், அதனை மேற்பார்வையிட்டு செயற்படுத்துவதற்காக இரண்டு லட்சம் ரூபா சம்பளமும் அவர்களுக்கு மேலதிகமாகக் கொடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டபோது, வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்து உரையாற்றியவர்கள், அதற்கு ஆதரவாக வாக்களித்தார்கள். இப்போது, அமைச்சர் ரிஷாத் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்புக்கு வரவுள்ள நிலையில், "பனை நிதியம்" துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தப்படுகின்றது என்கிறார். கூட்டமைப்பின் எம்.பி ஒருவர். அதாவது, கூட்டமைப்புக்குள் காணப்படும் ரிஷாத் எதிர்ப்பைச் சமாளிக்கவா இந்த வியூகம் என அவர் கூறுகின்றார்.

'பனை நிதி'யத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி எம்.பி.க்கள் மூலமாகவே பயன்படுத்தப்படப்போகின்றது. எம்.பி.கள் கொடுக்கும் திட்டங்களுக்கு நிதி வழங்கப்படும். கூட்டமைப்பு மற்றும் ஐ.தே.க. எம்.பிக்கள்தான் இந்த நலன்களைப் பெறுவார்கள் எனவும் சுட்டிக்காட்டுகின்றார் குறிப்பிட்ட எம்.பி அடுத்த வருடம் பாராளுமன்றத் தேர்தல்கள் வரவிருப்பதால், இவ்வாறான அபிவிருத்திகள் எம்.பி.க்களின் செல்வாக்கை உயர்த்தும். குறிப்பாக, பாழடைந்த வீதிகளைத் திருத்துதல், பாடசாலை மைதானங்களை புனரமைத்தல், சனசமூக அபிவிருத்தி,

# கூட்டமைப்பின் நிலை என்ன?

குளங்களைப் புனரமைத்தல் என்பன தேர்தலில் வாக்குகளை அள்ளித் தரும். கிராம மட்ட மக்களின் ஆதரவைத் தக்க வைப்பதற்கான திட்டங்களாக இவை இருக்கும். கூட்டமைப்பு வாக்குறுதியளித்த அரசியல் தீர்வு, காணாமல்போனோர் பிரச்சினை, காணி விடுவிப்பு, மீள்குடியேற்றம், கைதிகள் விடுவிப்பு, போர்க் குற்ற விசாரணை என்ற எதுவுமே நடைபெறப்போவதில்லை என்ற நிலையில், கம்பரலியவையும், பனை நிதியத்தையும் காட்டித்தான் மக்களிடம் வாக்கு கேட்க முடியும் என்ற நிலைக்கு கூட்டமைப்பு வந்துவிட்டது. அதனால்தான் அரசாங்கத்தின் பதவிக்காலம் முடிவுக்கு வரும் நிலையில் இது குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. கூட்டமைப்பு எம்.பி.க்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம்தான்.

ரிஷாத் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றிபெற்றால், அரசாங்கம் கவிழும் நிலை வரும். அப்படியானால், இந்த ஒதுக்கீடுகளைச் செயற்படுத்த முடியாத நிலை உருவாகும். அதனால், ரிஷாத்தைப் பாதுகாக்க கூட்டமைப்பு எம்.பி கள் முன்வருவார்கள் என்ற கருத்து ஒன்றும் முன்வைக்கப்படுகின்றது. ஆனால், ரெலோ ரிஷாத்துக்கு எதிரான பிரேரணையை ஆதரிப்பதென ஏற்கனவே தீர்மானித்துவிட்டது. அதனைவிட, சித்தார்த்தன், சார்ள்ஸ், கோடீஸ்வரன் போன்றவர்களும் அந்த நிலைப்பாட்டில்தான் இருக்கின்றார்கள். ரிஷாத்தைப் பாதுகாத்தால் ஊருக்குத் திரும்ப முடியாது என்ற நிலை இருப்பதை வன்னி மாவட்ட எம்.பி.கள் உணர்ந்திருப்பதை அவர்கள் சிலருடன் பேசிய போது உணர முடிந்தது.

சம்பந்தன், மாவை, சுமந்திரன், சிறீதரன், சரவணபவன் உட்பட ஆறு உறுப்பினர்கள் ரிஷாத் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றார்கள். ரிஷாத்துக்கு எதிரான நிலைப்பாட்டில் உள்ளவர்களை நோக்கித்தான் இப்போது "பனை நிதியம்" ஏவிவிடப்பட்டிருக்கின்றது. ரிஷாத் மீதான பிரேரணை ஒத்திவைக்கப்பட்டிருந்தாலும், இன்னும் இரண்டு வாரத்தில் அது சபைக்கு வரப்போகின்றது. பிரேரணையை ஆதரித்து விட்டு ஊருக்குச் செல்வதா அல்லது பிரேரணையை எதிர்த்து பனை நிதியத்தைப் பெற்றுக்கொள்வதா என்பது கூட்டமைப்பினருக்கு ஒரு சத்தியசோதனையாகத்தான் இருக்கும். ஆனால், அரசியல் நிர்ப்பந்தத்தால் ரிஷாத் பதவி துறந்தால் கூட்டமைப்பும் தப்பித்துக்கொள்ளும். ரிஷாத் பதவி விலக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை சனாதிபதி மைத்திரி கொடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால், ரணில் அதற்கு எதிரான நிலைப்பாட்டில் உள்ளார். இதனால், கொழும்பு அரசியலில் ரிஷாத் விவகாரம் ஒரு வெடிகுண்டாக வெடிக்கக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதையும் மறுப்பதற்கில்லை.

## யாழ் நூலகம் எரிப்பு நாளை நினைவு கூர்ந்தனர்

யாழ் நூலகம் எரிப்பு நாளை நேற்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நினைவு கூர்ந்தனர். இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன், மாநகர சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் உறுப்பினர்கள், மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# 70 வருடங்களாக இலங்கையில் தொடரும் தமிழின அழிப்பு - நோர்வே பாராளுமன்றத்தில் கருத்தரங்கு

*27.10.2019* அன்று நோர்வேயின் சிவப்புக் கட்சியும் நோர்வே ஈழத்தமிழர் அவையும் இணைந்து '70 வருடங்களாக இலங்கையில் தொடரும் தமிழினவழிப்பு' என்ற தலைப்பில் அரசியல் விவாதக் கருத்தரங்கை நோர்வேஜிய நாடாளுமன்ற வளாகத்தினுள் இருக்கும் அரங்கில் நடத்தியது.

அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவைத் தலைவர் பேராசிரியர் சிறிரஞ்சன், அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவையின் வெளிவிவகாரப் பொறுப்பாளர் திருச்சோதி, நோர்வே ஈழத்தமிழர் அவையின் தலைவர் ஸ்டீபன் புஸ்பராஜா, தமிழ்நெட் ஆசிரியர் ஜெயச்சந்திரன், இலங்கை ஆசிரியர்கள் சங்க முன்னாள் தலைவரும் முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான காதர் மாஸ்ரர், பர்மீய மனித உரிமைச் செயற்பாட்டாளரும் நிரந்திர மக்கள் தீர்ப்பாயம் 2013இல் பிரேமன் நகரத்தில் நடத்திய ஈழத்தமிழர்களுக்கான நீதி விசாரணையில் நீதிபதிகளில் ஒருவராக இருந்த மௌங்கு ஸார்னி, நோர்வே சிவப்புக் கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பியோனர் மொக்ஸ்னஸ், பிரான்சு நாட்டு அரசியல் ஆய்வு மாணவி சாருகா தேவகுமார் உள்ளிட்டோர் உரை நிகழ்த்தினர். முழு நிகழ்வையின் நெறியாள்கையை பேராசிரியர் இளங்கோ பாலசிங்கம் கையாண்டார்.

நோர்வே சிவப்புக் கட்சித் தலைவர் பியோனர் பேசும்பொழுது, 'இன்றைய நோர்வே பிரதமர் (வலதுசாரிக் கட்சி) எதிர்க்கட்சியாக இருந்தபொழுது, ஈழத்தமிழர்களுக்கு ஆதரவானக் குரலை எல்லா இடங்களிலும் பதிவு செய்திருந்தார், ஆனால், ஆளும் கட்சியின் தலைவராகப் பொறுப்பேற்றது முதல் ஈழத்தமிழர்களை மறந்தது ஏன்' என்று வினவினார்.

தொடர்ந்து, 'ஈழத்தின் இறையாண்மையை ஏற்றுக்கொண்டு, ஈழத்தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை உள்ளதென்பதை அனைத்துலக நாடுகளும் முன்மொழிய வேண்டும்' எனவும் கருத்துத் தெரிவித்திருந்தார். முள்ளிவாய்க்கால் இனவழிப்பின் பின்னரான 10 ஆண்டுகள், புவியியல் அரசியலில் ஈழத்தமிழர்களுக்கு எதிராக சூழ்ச்சிகள் மேற்கொள்ளும் மேற்குலக நாடுகள், இலங்கைத் தீவில் தமிழரின் நிகழ்கால நிலைமைகள், மார்ச் 2019 ஐ.நா. மனித உரிமை அமைப்பின் இலங்கைத் தீவுக் குறித்த அறிக்கை, உயிர்த்த ஞாயிறுக்குப் பின்னரான சூழல் குறித்த உரைகளோடு, தமிழீழ வரலாறு, தமிழின வரலாறு குறித்த பார்வைகள் கொண்ட உரைகளும் கருத்தரங்கில் இடம்பெற்றிருந்தது.




## நாடாளுமன்றக் கருத்தரங்கின் பின்னர் தீர்மானங்கள் முன்மொழியப்பட்டது.

1. மொழி, பண்பாடு, தாயகம், கூட்டு உளவியல் என அனைத்திலும் வரலாற்று வழியிலும் பூகோள ரீதியிலும் ஈழத்தமிழர்கள் இலங்கைத்தீவில் தனித்துவமானவர்கள்.
2. டச்சு, ஒல்லாந்தர்கள், பிரித்தானியர்களின் காலனியாதிக்கமே தமிழீழ இறையாண்மையை பறித்தது.
3. ஈழத்தமிழர்களும் சிங்கள மக்களும் இலங்கைத்தீவினுள்ளான அரசியல் உரிமையை பகிர்ந்த இறையாண்மை மூலமாக தீர்மானித்துக்கொள்ளும் கோரிக்கைகளும் போராட்டங்களும் தொடர்ந்தும் தோல்வியடைந்த பின்னரே, 1976இல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை (தனித்தமிழீழக் கோரிக்கை) முன்மொழியப்பட்டது, அதற்கான அங்கீகாரம் வழங்கும் விதமாக, 1977 இலங்கைத் தேர்தலில் தமிழர்கள் வாக்களித்திருந்தனர்.
4. அமைதி வழிப்போராட்டங்கள் நசுக்கப்பட்டப் பின்னரே, ஆயுதவழி போராட்டத்தினை சுமக்க தமிழர்களை வரலாறு கட்டாயப்படுத்தியது.
5. 30 வருடங்களுக்கு வருடப் போராட்டங்களும் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் இனவழிப்பு நோக்கம் கொண்ட, திட்டமிட்ட, படை நடவடிக்கையை அப்பாவித் தமிழர்கள் மீது இலங்கை அரசு ஏவியது. அதன் பின்னரான 10 ஆண்டுகளிலும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு தொடர்ந்து நடந்தது, இன்னும் நடக்கிறது.
6. 7 கோடி மக்களின் அரசியல் பிரதிநிதியாக இருக்கும் தமிழ்நாடு சட்டமன்றமும் தமிழீழப் பிரதேசத்தின் வீற்றிருக்கும் இலங்கையின் வடக்கு மாகாண சபையும் தமிழின அழிப்பை விசாரிக்க பன்னாட்டு நீதி விசாரணை தேவை என்னும் தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறது.
7. இலங்கை அரசு முன்மொழியும் உள்ளக நீதி விசாரணையை தமிழர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.
8. இதுவரை பன்னாட்டு அரங்கிலும் மனித உரிமை அவையிலும் கொடுத்த வாக்குறுதிகளை இலங்கை அரசு நிறைவேற்றியதே இல்லை.
9. ஒற்றையாட்சி அதிகாரத்தின் கீழான தீர்வு நிரந்திரமானதல்ல, நோர்வேயும் பன்னாட்டு சமூகங்களும் பன்னாட்டு சட்டவரம்புகளின் அடிப்படையில் தமிழர்களின் தேசத்தை அங்கீகரித்து, அவர்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளவேண்டும்.
10. தமிழ் மொழியினை தாய் மொழியாகக் கொண்டு வாழும் இஸ்லாமியர்களுக்கு உரிய அரசியல் தீர்வினை உள்ளடக்கியத் தீர்வாக இருத்தல் வேண்டும்.
11. ஈழத்தமிழர்களுக்கு உரிய வரலாற்று வழி இறையாண்மை, போராடிப் பெற்ற இறையாண்மை, பரிகாரம், தீர்வுக்குரிய இறையாண்மையை ஏற்றுக்கொண்டு இலங்கைத் தீவிலும் பன்னாடுகளிலும் வாழும் இலங்கைத் தீவின் வம்சாவளித் தமிழர்களிடம் பொதுவாக்கெடுப்பு நடத்தல் வேண்டும்.
12. போரின் பொழுதும் போரின் பின்னரும் பாதிக்கப்பட்டு, வாழ்விடம் இழந்து, வாழ்க்கை இழந்து வாடும் எண்ணற்ற விதவைகள், குழந்தைகள், உடல் ஊனமுற்றோர், படுகாயமடைந்து உடல் வலிமை இழந்தோர்களுக்கு நோர்வேயும் பன்னாட்டுச் சமூகமும் போதிய நிதியினை வழங்கி, அவர்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த எல்லா வகையிலும் உறுதுணையாக இருத்தல் வேண்டும்.
13. இணைத் தலைமை நாடுகளில் அங்கம் வகித்த நோர்வே, தன்னிச்சையாக போர் நிறுத்த ஒப்பந்தத்தை கிழித்தெறிந்து போர் தொடங்கிய இலங்கை அரசினை கேள்விக்குட்படுத்துவது தார்மீகக் கடமையாகிறது. அதேவேளை, உலகெங்கும் அகதி முகாம்களில் சிதறி வாழும் பல லட்சத் தமிழர்களை இலங்கைத் தீவிற்குள் எவ்வித இராணுவ ஆக்கிரமிப்பும் அற்ற தமிழர் தாயகத்தில் வாழ வழிவகை செய்யவேண்டும்.

# அமெரிக்க சனாதிபதி தேர்தலில் டிரம்ப் மீண்டும் போட்டி



அமெரிக்க சனாதிபதி தேர்தலில் டிரம்ப் மீண்டும் போட்டியிடுவது தொடர்பாக, 18ஆம் திகதி அதிகாரப்பூர்வமாக அறிவிக்கிறார்.

அமெரிக்காவில் அடுத்த ஆண்டு நவம்பர் 3ஆம் திகதி சனாதிபதி தேர்தல் நடக்கிறது. அமெரிக்க சனாதிபதியாக பதவி ஏற்ற நாளில் இருந்து, 2020 சனாதிபதி தேர்தலில் போட்டியிடுவேன் என்று டிரம்ப் (வயது 72) கூறி வருகிறார். சனநாயக கட்சி சார்பில் வேட்பாளர் போட்டியில் ஜோ பிடென் உள்ளிட்ட பல தலைவர்கள் உள்ளனர். இந்த நிலையில், தான் அடுத்த சனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக 18ஆம் திகதி அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்போவதாக தெரிவித்துள்ளார். கடந்த தேர்தலில் டிரம்ப் வெற்றியில் முக்கிய பங்கு வகித்த புளோரிடா மாகாணத்தின் ஆர்லண்டோ நகரில் 18ஆம் திகதி மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த கூட்டத்தில் டிரம்ப் மனைவி மெலனியாவுடன் கலந்து கொள்கிறார். துணை சனாதிபதி மைக் பென்சும் மனைவி கரேனும் பங்கேற்கிறார். இதையொட்டி டுவிட்டரில் டிரம்ப் ஒரு பதிவு வெளியிட்டுள்ளார். அதில் அவர், “நான் இரண்டாவது முறையாக சனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதை ஆர்லண்டோவில் சூன் 18ஆம் திகதி அறிவிக்கிறேன். இந்த வரலாற்றுச்சிறப்புமிக்க கூட்டத்தில் கலந்து கொள்ளுங்கள்” என அழைப்பு விடுத்துள்ளார்.

# ஐ.நா. உதவி பொது செயலாளராக இந்திய பெண்மணி நியமனம்

ஐ.நா. உதவி பொதுச்செயலாளராக இந்தியாவை சேர்ந்த அனிதா பாட்டியா என்ற பெண்மணி நியமிக்கப்பட்டுள்ளார். ஆற்றல் முகாமைத்துவ, நிலைத்தன்மை, கூட்டு ஆகியவற்றுக்கான உதவி பொதுச்செயலாளராக அவர் செயல்படுவார் என்று ஐ.நா. பொதுச்செயலாளர் குட்டரஸ் அறிவித்துள்ளார்.



# இந்தியாவுக்கான வர்த்தக முன்னுரிமை இரத்து – டிரம்ப் அறிவிப்பு



இந்தியாவுக்கான வர்த்தக முன்னுரிமை அந்தஸ்து இரத்து செய்யப்படும் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அறிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு வழங்கப்பட்டு வந்த வர்த்தக முன்னுரிமை அந்தஸ்தை வரும் சூன் 5-ஆம் திகதியோடு ரத்து செய்வதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அதிரடியாக அறிவித்துள்ளார். வளரும் நாடுகளின் பொருளாதாரம் வளர்ச்சி அடைய வேண்டும் என்பதற்காக வர்த்தக முன்னுரிமை அளிக்கும் (ஜஎஸ்பி) திட்டத்தை அமெரிக்கா செயல்படுத்தி வந்தது. இதன்படி, வளரும் நாடுகள் அமெரிக்காவுக்கு தங்கள் நாட்டில் இருந்து வரியின்றி பொருட்களை ஏற்றுமதி செய்ய முடியும். இந்த சலுகை வளரும் நாடுகளுக்கு வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையில், நீண்டகாலமாக இந்தியாவுக்கு அளிக்கப்பட்டு வரும் வர்த்தக முன்னுரிமை சலுகையை ரத்து செய்யப்போவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார். வரும் சூன் 5 ஆம் திகதியோடு ரத்து செய்யப்பட இருப்பதாக அறிவித்துள்ளார். அமெரிக்காவின் பொருட்களை எளிதாக, இந்திய சந்தைக்குள் விற்பனை செய்ய அனுமதிப்பது குறித்து எங்களுக்கு எந்த உறுதியும் அளிக்கவில்லை. இதனால், இந்தியாவுக்கு வழங்கப்பட்டு வந்த முன்னுரிமை அந்தஸ்தை இரத்து செய்கிறேன் என்றார் டிரம்ப். இதனால் இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு வரியின்றி ஏற்றுமதி செய்யப்பட்டு வந்த பொருட்களுக்கு சூன் 5-ஆம் திகதிக்கு மேல் வரி விதிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது. ஜிஎஸ்பி மூலம் அதிகம் பயன்பெறும் நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது. தெற்கு ஆசிய நாடுகளிடம் இருந்து சுமார் 5.6 பில்லியன் டொலர் மதிப்புடைய பொருட்களை இந்தியா வரியின்றி இறக்குமதி செய்து வந்தது.

# அமெரிக்க விசாவுக்கு விண்ணப்பிப்பவர்களின் சமூக ஊடக கணக்குகள் இனி ஆராயப்படும்

அமெரிக்க அரசின் புதிய விதிமுறைகளின்படி, அந்நாட்டிற்கு பயணிக்க விசா கோரி விண்ணப்பிக்கும் கிட்டதட்ட அனைத்துவித விண்ணப்பதாரர்களும் இனி தங்களது சமூக ஊடக கணக்குகள் குறித்த விவரங்களை அளிக்க வேண்டியிருக்கும். அமெரிக்காவுக்கு பயணிக்க விசா கோரி விண்ணப்பிப்பவர்கள், தங்களது சமூக ஊடக கணக்குகள் குறித்த விவரங்களோடு, கடந்த ஐந்தாண்டுகளாக பயன்படுத்திய மின்னஞ்சல் முகவரிகள் மற்றும் தொலைபேசி எண்களை அளிக்க வேண்டும் என்று அந்த புதிய விதிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு இந்த புதிய விதிமுறைகள் வகுக்கப்பட்டபோது, இதன் காரணமாக ஓராண்டிற்கு 14.7 மில்லியன் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று மதிப்பிடப்பட்டிருந்தது. அரசு ரீதியான மற்றும் உத்தியோகபூர்வ விசா விண்ணப்பங்களுக்கு இந்த புதிய விதிமுறையிலிருந்து விலக்கு அளிக்கப்படும். ஆனால், அமெரிக்காவுக்கு பணிவாய்ப்பு அல்லது கல்வி தொடர்பாக செல்பவர்களுக்கு இதிலிருந்து விலக்கு கிடையாது.

# டிரம்ப் உடன் சந்திப்புக்கு ஏற்பாடு செய்த 5 வடகொரிய அதிகாரிகளுக்கு மரண தண்டனை - கிம் ஜாங் உன்

டிரம்ப் உடனான 2-வது சந்திப்பு தோல்வி அடைந்ததால் ஆத்திரம் அடைந்த வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன் இந்த சந்திப்புக்கு ஏற்பாடு செய்த 5 அதிகாரிகளுக்கு மரண தண்டனை அளித்தார்.

வடகொரியாவின் தலைவரான கிம் ஜாங் உன் சர்ச்சைக்கு பெயர் போனவர். தனது தந்தையின் மறைவுக்கு பின் கடந்த 2011-ஆம் ஆண்டு ஆட்சி பொறுப்பை ஏற்ற இவர் நாட்டில் பல அதிரடி மாற்றங்களை கொண்டு வந்தார்.

ஐ.நா.வின் தீர்மானங்களை மீறி தொடர்ச்சியாக அணு ஆயுதம் மற்றும் ஏவுகணை சோதனைகளை நடத்தி சர்வதேச நாடுகளை அதிரவைத்து வந்தார். இது ஒருபுறம் இருக்க தனது அரசில் ஊழல் செய்யும் அதிகாரிகள் மற்றும் தனக்கு விசுவாசமாக இல்லாதவர்களுக்கு கொடூரமான முறையில் மரண தண்டனை நிறைவேற்றியதாக அவ்வப்போது செய்திகள் வெளியாகும்.

அப்படியான ஒரு செய்தி தற்போது வெளியாகி உலக நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாகி இருக்கிறது. அமெரிக்க சனாதிபதி டிரம்ப் உடனான 2-வது சந்திப்பு தோல்வியடைந்த நிலையில் இந்த பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்த அமெரிக்காவுக்கான சிறப்பு தூதர் கிம் ஹியோக் சோல் மற்றும் வெளியுறவுத்துறையின் மூத்த அதிகாரிகள் 4 பேரை சுட்டுக்கொன்று மரண தண்டனை நிறைவேற்றியதாக தென்கொரியா பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. எலியும்



பூனையுமாக இருந்து வந்த டிரம்ப் மற்றும் கிம் ஜாங் உன் கடந்த ஆண்டு சூன் மாதம் சிங்கப்பூரில் முதல்முறையாக சந்தித்து பேசினர்.

இந்த சந்திப்பு மிகவும் இணக்கமாக நடைபெற்றதால் இருநாட்டு உறவில் நீடித்த விரிசல் விலகியது. இதையடுத்து வடகொரியா ஏவுகணை சோதனைகளை நிறுத்திவிட்டு அமைதி பாதைக்கு திரும்பியது.

இந்த நிலையில் கொரிய தீபகற்பத்தை அணுஆயுதமற்ற பிரதேசமாக மாற்றுவதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்க டிரம்ப் மற்றும் கிம் ஜாங் உன் ஆகிய இருவரும் கடந்த பிப்ரவரி மாத இறுதியில் வியட்நாமில் 2-வது முறையாக சந்தித்து பேசினர்.


ஆனால் இந்த சந்திப்பு முதல் சந்திப்பை போல இணக்கமாக நடைபெறவில்லை.

கிம் ஜாங் உன்னின் கோரிக்கையை ஏற்க மறுத்து டிரம்ப் பேச்சுவார்த்தையில் இருந்து பாதியிலேயே வெளியேறினார். இது கிம் ஜாங் உன்னுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியது. இதையடுத்து இந்த சந்திப்புக்கு ஏற்பாடுகளை செய்த சிறப்பு தூதர் கிம் ஹியோக் சோல் மற்றும் வெளியுறவுத்துறை அதிகாரிகள் 4 பேர் மீது நாட்டின் தலைவருக்கு துரோகம் செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டது.

விசாரணைக்கு பிறகு கடந்த மார்ச் மாதம் அவர்கள் 5 பேருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டதாகவும் அதனை தொடர்ந்து அங்குள்ள ஒரு விமான நிலையத்தில் வைத்து 5 பேரும் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் தென்கொரியா பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் வெளியுறவுத்துறை அதிகாரிகள் 4 பேரின் பெயர் உள்ளிட்ட விவரங்கள் வெளியிடப்படவில்லை. அதேபோல் டிரம்ப் உடனான சந்திப்பின் போது கிம் ஜாங் உன்னின் மொழிபெயர்ப்பாளராக பணியாற்றிய ஷின் ஹே யாங் என்கிற பெண் தனது பணியை சரியாக செய்யாத குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செவ்வாய் கிரக குடியேற்றத்தால் புதிய மனித இனம் தோன்றுமா?



சொர்க்க பூமியாக நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பூமி இன்று வேகமாக சுடுகாடாக மாறி வருகிறது. காரணம், மக்கள்தொகை பெருக்கம் மற்றும் பிளாஸ்டிக் போன்ற சுற்றுச்சூழல் கேடு மற்றும் உயிரழிவை ஏற்படுத்தும் ஆபத்தான கண்டுபிடிப்புகள்.

வேகமாக அழிந்துவரும் பூமியுடன் சேர்ந்து நாமும் அழிந்து விடக் கூடாது என்பதற்காக, செவ்வாய் போன்ற கிரகங்களில் மனிதர்களை குடியேற்ற திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அங்கு மனிதர்களை பாதுகாப்பாக கொண்டு சென்று, மீண்டும் பூமிக்குத் திருப்பிக் கூட்டிவரும் மறுபயனுறு ராக்கெட்டுகள் (reusable spacecrafts) உள்ளிட்ட பல நவீன விண்வெளி ஊர்திகளை தொடர்ந்து உருவாக்கி வருகிறது ஸ்பேஸ் எக்ஸ் (SpaceX ) நிறுவனம். இந்த நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியாக இருப்பவர் இலான் மஸ்க்.

வருகிற 2024-ம் ஆண்டுக்குள் மனிதர்களை செவ்வாய் கிரகத்துக்கு அனுப்புவதுதான் இலான் மஸ்கின் மிக முக்கியமான இலக்கு. இவர் மட்டுமல்லாமல், அமெரிக்காவின் நாசாவும், நிலவு மற்றும் செவ்வாய் கிரகத்துக்கு மனிதர்களை விரைவில் அனுப்பிவிட அயராது உழைத்துக்கொண்டு இருக்கிறது. செவ்வாய்க்கு நம்மைக் கொண்டுசெல்லத் தேவையான அதி நவீன தொழில்நுட்பங்கள் நம் கையில் இருந்தாலும் கூட, “அங்கு சென்ற பின்னர், மனித உடலில் எந்தவிதமான மாற்றங்கள் அல்லது பாதிப்புகள் ஏற்படும்?” என்று யாருக்குமே தெரியாது. ஆனால் இத்தகைய பல கேள்விகளை மனிதர்களாகிய நாம் கேட்டு அவற்றுக்கான விடைகளைக் கண்டறிந்தாக வேண்டும் என்கிறார் அமெரிக்காவில் உள்ள ரைஸ் பல்கலைக்கழகத்தின் பரிணாமவியல் பேராசிரியர் ஸ்காட் சாலமன். ஏனெனில், செவ்வாய் கிரகம் போன்ற வேற்றுக்கிரகம் செல்லும் மனிதர்களின் உடலில் மரபணு மாற்றம் ஏற்படும் என்பது சமீபத்தில் நிரூபிக்கப்பட்ட உண்மைகளுள் ஒன்றாகும்.

ஆனால் வேற்றுக்கிரகங்களுக்கு சென்றபின்னர் மனிதன் அங்கே பற்பல ஆண்டுகள் வசித்தால் அவனுடைய சந்ததிகளின் உடலில் என்னென்ன புதிய மாற்றங்கள் நிகழும் என்பது குறித்த ஆய்வுகளை நாம் மேற்கொள்ள வேண்டும் என்கிறார் ஸ்காட்.

செவ்வாய்க்கு செல்லும் முதல் மனிதர்களின் உடலில் என்னென்ன மாற்றங்கள் நிகழக்கூடும் என்ற ஒரு சிறு பட்டியலையும் வெளியிட்டுள்ளார் ஸ்காட். அவை:

1. செவ்வாய்க்கு சென்ற பின்னர் சுமார் இரண்டு சந்ததிகளுக்கு பிறகு, மனிதனின் எலும்புகள் உறுதியாகும்.

2. கிட்டப்பார்வைக்கான கண்ணாடிகள் தேவைப்படும்.

3. மனித நோய் எதிர்ப்பு சக்தி முற்றிலும் குறைந்துபோகும்.

4. கர்ப்பம் தரித்தல் மற்றும் குழந்தைப்பேறு மிக மிகக் கடினமாகும்.

5. பூமியில் உள்ளதை விட சுமார் 5000 மடங்கு அதிகமான கதிரியக்கம் காரணமாக பல மரபணு மாற்றங்கள் நிகழ்ந்து அதனால் புற்றுநோய் மனிதனைத் தாக்கும்.

இவ்வாறு நீள்கிறது அந்த பட்டியல்.

அது சரி, அவ்வளவுதானா இன்னும் வேறு பாதிப்புகள் ஏதும் உண்டா என்று கேட்டால், மிக மிக முக்கியமாக செவ்வாய் கிரக மனிதர்கள் பூமியில் உள்ள மனிதர்களுடன் இனப்பெருக்கம் செய்யக் கூடாது என்கிறார் ஸ்காட். ஏனெனில், செவ்வாய் கிரக மனிதர்கள் பூமியில் உள்ள மனிதர்களை தொடர்புகொண்டாலோ அல்லது இவர்கள் அவர்களைத் தொடர்பு கொண்டாலோ, விளைவு மரணமாகத்தான் இருக்கும் என்கிறார்.

காரணம், செவ்வாயில் தற்போது உயிர்கொல்லி நோய்களை ஏற்படுத்தும் நுண்ணுயிரிகள் கிடையாது. ஆனால் பூமிக்கும், செவ்வாய்க்கும் இடையிலான பரிமாற்றம் கட்டுப்படுத்தப்பட்டால், உயிர்கொல்லி நோய்களை அழித்துவிடலாம். செவ்வாய்க்கு செல்வதால் ஏற்படும் மரபணு மாற்றங்கள் அனைத்துமே ஆபத்தானது என்று சொல்லிவிட முடியாது. மேலும் முக்கியமாக, பூமியில் பிறக்கும் ஒவ்வொரு புதிய குழந்தைக்கும் சுமார் 60 புதிய மரபணு மாற்றங்கள் தோன்றுகின்றன என்று கூறப்படுகிறது. ஆனால் செவ்வாயில் பிறக்கும் குழந்தைகளுக்கு சுமார் ஆயிரக்கணக்கான மரபணு மாற்றங்கள் தோன்றும் என்கிறார் ஸ்காட். இதன்மூலம், செவ்வாயின் மிக ஆபத்தான சுற்றுச்சூழலில் வாழும் பல திறன்களை மனிதர்கள் பெற வாய்ப்புண்டு என்றும், உதாரணமாக, 1. கதிரியக்கத்தை தாங்கும் தோல், 2. குறைவான ஆக்சிஜனுடன் வாழும் திறன் மற்றும் கர்ப்பம் தரிப்பது காரணமாக இழக்கும் கால்சியத்தை ஈடு செய்யும் அளவுக்கு மிகவும் திடமான எலும்புகள் ஆகியவற்றைக் கூறலாம். செவ்வாய்க்கு சென்றதன் காரணமாக இயற்கையாக தோன்றும் மரபணு மாற்றங்களுடன் சேர்த்து, ‘கிறிஸ்பர்’ (CRISPR) போன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நமக்குத் தேவையான மரபணு மாற்றங்களை மனிதர்களாகிய நாமே செயற்கையாகவும் உருவாக்கிக் கொள்ளலாம் என்றும் கூறுகிறார் பேராசிரியர் ஸ்காட். ஆக மொத்தத்தில், வாழத் தகுதியற்றுப் போகும் பூமியில் இருந்து விண்வெளியில் உள்ள வேற்றுக்கிரகங்கள் மற்றும் நிலவுகள் போன்ற பகுதிகளுக்கு மனித இனம் குடிபெயர்ந்துவிட்டால், முற்றிலும் வித்தியாசமான பற்பல மனித இனங்கள் தோன்றிவிடும் என்றும், அதனால் இனிவரும் நம் சந்ததிகள் யார் யார், அவர்கள் எப்படி இருப்பார்கள் மற்றும் அவர்களால் நமக்கு நன்மையா தீமையா என்பது எதிர்காலத்தில்தான் தெரியவரும் என்று எச்சரிக்கிறார் பேராசிரியர் ஸ்காட் சாலமன்.

# காட்டுக்குள் 17 நாள்கள் தனியாக சிக்கிக்கொண்ட பெண். திக்திக் நிமிடங்கள்

காணாமல் போவதென்பதே ஒரு திகிலான அனுபவம். அதுவும் 2,000 ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவு கொண்ட அடர்ந்த காட்டுப்பகுதியில் தொலைந்துபோனால், ஈரக்குலையுடன் சேர்ந்து அனைத்துமல்லவா நடுங்கும். அப்படியான ஒரு சம்பவம் அமெரிக்காவில் நடந்துள்ளது. ஹவாய் மாகாணத்தைச் சேர்ந்தவர் அமண்டா எல்லெர் (வயது 35). யோகா பயிற்சியாளரான இவர் கடந்த 8-ம் திகதி மக்கோவா நகரில் உள்ள வனப்பகுதிக்கு காரில் சென்றிருக்கிறார். பின்னர் அவர் அங்கு ஓர் இடத்தில் காரை நிறுத்திவிட்டு வனப்பகுதிக்குள் நடந்து சென்றிருக்கிறார். அதன் பின்னர் அவர் திரும்பவேயில்லை. இதையடுத்து அமண்டா எல்லெர் குடும்பத்தினர் அவரை செல்போனில் தொடர்புகொள்ள முயன்றிருக்கிறார்கள். ஆனால், அவர் செல்போன், பணப்பையை காரிலேயே விட்டுச் சென்றிருப்பது பிறகுதான் தெரியவந்திருக்கிறது. அமண்டா எல்லெர் மாயமான விவரத்தைத் தெரிந்ததும், தேடுதல் பணி தொடங்கியிருக்கிறது. அடர்ந்த காட்டுப்பகுதி என்பதால், அவரை உடனே கண்டுபிடிக்க முடியவில்லை. 1000-க்கும் மேற்பட்டோர் தேடும் பணியில் ஈடுபட்டும் எந்தப் பலனும் இல்லை. இதையடுத்து, அமண்டா எல்லெரை கண்டுபிடித்துத் தருபவருக்கு 50,000 டொலர் பரிசாக வழங்கப்படும் என அவரது குடும்பத்தினர் அறிவித்தனர். அவர்கள் அதோடு நிறுத்திவிடாமல் ஹெலிகாப்டர் ஒன்றை வாடகைக்கு எடுத்து அவர்களும் தேடுதல் வேட்டையில் இறங்கினர். அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்திருக்கிறது. அவர் காணாமல் போன காட்டுப்பகுதியின் ஓர் இடத்தில், அமெண்டா எல்லெரின் அசைவுகள் தென்பட்டிருக்கிறது. உயிருடன், நீர்வீழ்ச்சிக்கு அருகில் அமர்ந்திருப்பதை மீட்புக் குழுவினர் கண்டதும், அவரைப் பத்திரமாக மீட்டு, மருத்துவமனையில் சேர்த்திருக்கின்றனர். கார் நின்ற இடத்திலிருந்து சுமார் 7 கி.மீ. தொலைவில் வனப்பகுதிக்கும் வழி தெரியாமல் நடந்திருக்கிறார் அமெண்டா. அதனால் அவருடைய கால்கள் பலத்த காயம் அடைந்த நிலையில் நகரமுடியாதபடி ஆகியிருக்கிறது.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பிறகு, தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது. 17 நாள்கள் காட்டுக்குள் தொலைந்துபோன தனது திக்திக் நிமிடங்களை, சாப்பிட எதுவுமில்லாமல் இலைகளை மட்டும் சாப்பிட்டு சர்வைவல் ஆன விவரங்களைக் கண்ணீருடன் காணொளியாக பதிவு செய்திருக்கிறார். இப்போது அந்த காணொளி சமூக வலைதளங்களில் வைரலாகிவருகிறது.

